விலை 20/=

ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 01 ஐப்பசி - கார்த்திகை 2018 களரி: 10



## அரசியலில் நேற்று, இன்று, நாளை?




இலங்கை கரித்தாஸ் பொன்விழா ஆண்டில் ..



எழுவீர் எம் விடியலுக்காய்...



சாதனைப்பெண்



நீ உருவாகி பிறரை உருவாக்கு



# எங்கே அந்தப் பனைகள் எரிகிறது வடலிகள்

தரையின் நிலத்தடி நீரின் ஆழம் வரையும் வேர்விட்டு நீரை உறிஞ்சக்கூடிய ஆற்றலுள்ள பனைமரங்கள் கடந்த நாட்களின் வறட்சிக்கும் மழைக்கும் மிடுக்குடன் நிமிர்ந்து நிற்கும் பனை மரங்கள், நீண்டு வளர்ந்து கம்பீரமாக நிற்கும் பனை மரங்கள், கடும் வெய்யில் காரணமாக எரிகின்றதா? யாராவது பனைகளை எரிய வைக்கின்றார்களா? என்பது பற்றி எமதுயாழ்களரி ஆய்வுக்குழுவினர் கிழக்கு அரியாலைவீதி, ஊர்காவற்துறை முதன்மை வீதிகளில் எரியூட்டப்பட்ட பனைகளை ஆய்வு செய்யச் சென்றிருந்தனர். பனை வளத்தைப் பாதுகாப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற முடிவுகள் தான் எமது ஆய்வுக்குழுவினர் தெரிவித்த தகவலின் படி கிழக்கு அரியாலைப்பகுதியில் வடலிப்பனைகள் எரியூட்டப்படுகின்றன. மண்ணெண்ணெய் தூவி எரியூட்டியது யார் என்று விசாரித்தோம். அந்தப் பனைக் காணி உரிமையாளர் ஒருவர் தான் பனம் வடலிப் பற்றைகளை அழித்துக் காணியைத் துப்பரவாக்க முயற்சித்ததாகவும் கூறப்பட்டது. அவரது காணிக்குள் நிற்கும் வடலிகளுடன், வீதியோரங்களில் சிரித்துக் கொண்டு நின்ற வடலிகளையும் யார் எரியூட்டியது என்றும் அறிய முடிந்தது. சரி ஊர்காவற்துறைப்பக்கம் போனவர்கள் என்ன குறிப்பிட்டார்கள் வெயிலின் காரணமாகத்தான் அவை எரிந்திருக்க வேண்டும் என்கிறார்கள் மாலை நேரங்களில் எரிவதை அவதானித்தவர்கள் தெரிவித்த கருத்தின் படி விசாரிக்க ஆளில்லாத நேரத்தில் பனைவடலிகள் எரிந்தது குறித்து யோசித்துக் கொண்டிருந்த போது அன்று மழை நாள் மேகம் இருட்டிக் கொண்டிருந்த மாலை 10.10.2018 அன்றும் இரண்டு கும்பல் வடலிகள் எரிந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெயிலில் அல்ல சில மதுப்பிரியர்கள் அப்பகுதியில் கூடி உரையாடுகின்றனர். வெளிச்சத்திற்காகவும், விசமத்திற்காகவும் எரியூட்டிச் செல்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதைகுழிகளின் உண்மை வெளிப்படுமா

வடக்கில் தோண்டத் தோண்ட மனித எலும்புகளே குவியலாகத் தென்படும் தேசத்தில் மன்னார் சதோசா வளாகத்தில் மனித எலும்புக்கூடுகள் 190 தாண்டிச் செல்கிறது. இத்தடயங்கள் வரக் காரணமானவர்கள் அதில் வாழ்ந்து காவல் பணியேற்றவர்கள் யார்? இதனை நடாத்தியவர்களுக்குக் கட்டளையிட்டவர்கள் யார்? காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் ஆணைக்குழு இது போன்று வடகிழக்கில் அடையாளங் கண்ட பிரதேசப் புதைகுழிகள் வெறும் ஆராய்ச்சியோடு அடங்கி விடுமா? உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்த தகவல் அறியும் சட்டங்களால் மக்களுக்கு தெரியப்படுத்துவார்களா அல்லது ஆணைக்குழுவும் வேறுதிசையில் பயணிக்குமா என மக்கள் கேள்விகளுக்கு பதில் கிடைக்குமா?

# எதுவும் நடக்கலாம்

இன்றைய அரசியலில் எதுவும் நடக்கலாம் தேர்தல் காலம் நெருங்கு கிறது. கட்சி மாறும் கைங்கரியம் சில பெற்ற பணம் மிஞ்சும், தோற்றாலும் பதவிக்கு வரலாம், எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழை பார்க்க காலத்திற் கேற்ற கருத்தை கொள்கைகளாக முன் வைக்கலாம். எந்தக் கட்சியும் விஞ்ஞா பனத்தை எழுதி அதனைக் கூடப் படிப்பதில்லையே. நடக்கும் என்பார் நடக்காது. நடக்காது என்பார் நடந்து விடும்.

அரசியல்வாதிகளுக்கு தூக்கமே வருவதில்லை. எதில் பாய்ந்தால் வாசிகள் அதிகம், யாரை மாத்தி அரசியலில் வெற்றிகளைப் பறிக்கலாம் என கட்சிகளுக்குள் போட்டி ஆரம்பமாகி விட்டது. நேற்று வேறு, இன்று வேறு, நாளை வேறு என முகமூடிகளை மாற்றும் நாடகங்கள் அரங்கே நிறைந்தது.

தேசிய அரசியல் கட்சிகளில் மாறினாலும் தோற்றாலும் வெற்றியே. இதனை மாகாணசபை, ஜனாதிபதி போனஸ் சீற் என வழி உண்டு. தேர்தலில் மக்களை இறுதியில் மாற்றி விடவே புதுப்புது அறிக்கை வேடிக்கை வினோத பேச்சுக்களும், உரிமை கோரல்களும், சாடல் பேச்சுக்களும், வாய்ச்சவாடல்களுமே அரங்கேறுகிறது. மக்களின் விழிப்பு ணர்வை ஏற்படுத்த பொது அமைப்புக்களே முன் வாருங்கள். வாக்களிக்கும் உரிமையை சரியாகப் பயன்படுத்துங்கள்.

# தடைகள் தாண்ட வழியேது?

துன்பப்படுவோர் யாராக இருந்தாலும் அவர்களின் துயர் துடைப்பதைத் தானே எல்லா சமயங்களும் போதிக்கிறது. அதிலும் எமது நாடு ஆன்மீகத்தை உயர்வாய் மதிப்பது வெறும் வழிபாட்டுடன் தானா? அப்படியானால் தாய், தந்தை பிள்ளைகளைத் தேடியலையும் மக்களின் மனக்குறை தீர ஆன்மீகத்தில் ஈடுபடுவோர் மனமிரங்கிக் குரல் கொடுக்க மாட்டார்களா?

இந்தியாவிலும், இலங்கையிலும் மரணித்தீர்ப்பிட்டு சிறையில் வாடுவோரும் விடுதலைக்காகப் போராடி அகிம்சைப் போரில் ஈடுபடுவோருக்காகவும் மீண்டும் வாழ குடும்ப உறவுகளின் ஏக்கம் தீரபிற இன, மத உறவுகளும் விடுதலைக்குக் குரல் கொடுக்க எந்த சமயமாவது தடை விதிக்குமா?

உயிரைப் பணயம் வைத்து உண்ணா நோன்பிருப்பதை உணர மறுக்கும் கல்லான இதயங்களை இளக வைப்பதை விட கைதிகளை வைத்து அரசியல் நடாத்தும் எமது நாட்டின் இன, மொழி பாகுபாடு இல்லாத தூய அரசியல்வாதிகளாக சகோதர இனத்தவர்கள் யார் முன்வருவார்கள்?

உலக நாட்டு அரசியல் பேசுவோர் உள்நாட்டு அரசியலில் பாகுபாடு காட்டுவதை யாரும் கண்டு கொள்ளாது முண்டு கொடுக்கும் எம்மவர்களுக்கு நம்ம நாட்டின் அழுகுரல் ஏக்கங்களுடன் அலையும் பெற்றோர், சகோதரர்கள், சிறுவர்களின் மன உணர்வுக்கு என்ன விடையளிப்பார்கள்? உலக அமைதிக்குக் குரல் கொடுத்து எமது நாட்டில் அடக்குமுறையால் பேரம் பேசி வரும் அரசியல்வாதிகளின் உலக நாட்டினர் உணரத் தவறுவது ஏன்? மகாத்மாகாந்திஜி அகிம்சைப் போராட்டத்தின் தந்தையாக போற்றி விழாவில் உரத்துக் குரல் கொடுப்போர் உள் நாட்டில் அகிம்சை வழியில் மேற் கொள்ளப்படும் உண்ணா நோன்புகள், பாத யாத்திரைகள், குரல் கொடுப்புக்கள், கோரிக்கைகளில் மட்டும் அகிம்சை வழி நடைபெறும் மக்கள் குரலுக்கு மதிக்கத் தவறும் நிலைக்கு மதம், மொழி, இனப் பாகுபாடுகள் தான் காரணமாகும். இதனால் அகிம்சை குரல் கொடுப்புக்கள் அர்த்தமிழக்கக் காரணமாகின்றது.

# நற்பணி சாதனையாளர் விருது "2019"

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த இளையோர் மற்றும் சமூகசேவை ஆர்வலர்களே!

உங்களை சாதனையாளர்களாக உருவாக்கி

**"வடக்கின் சாதனையாளர் நற் பணி விருது"**

**"கிழக்கின் சாதனையாளர் நற்பணி விருது"**

என்ற பிரிவுகளில் 10,000 ரூபா பணப்பரிசும், நினைவுக் கேடயமும், சான்றிதழும் வழங்கி மதிப்பளிக்கும் செயல்திட்டம்

**இந்தப் பலப்பரீட்சையில் பங்குபற்ற நீங்கள் தயாரா........**

**மேலதிக விபரங்களைப் பெற விண்ணப்பியுங்கள்**

**077-6510375**

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்

28/1, ஏ.வி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

# யாழ் கவரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

ஐப்பசி - கார்த்திகை


வாசகர்கள்
அனைவருக்கும்
எமது தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



# நேற்று-இன்று-நாளை?

(நமது நிருபர்)

ரணில், மகிந்த, மைத்திரி, சம்பந்தன், விக்கி போன்றவர்களின் அரசியலில் மாற்றங்கள் அதிரடியாக ஏற்பட்டதாக வெளிப்பட்டாலும் முன்கூட்டியே மறைமுகத் திட்டமிடலின் அடையாளமே ஆட்சிகளை மாற்றியது என்பதும் முன்னைய ஆட்சி மாற்றமும் ஓர் எடுத்துக்காட்டாகும். நேற்று இருந்த பதவிகள், பட்டங்கள், பவுசான வாழ்வு, தனியே பெரிய பதவிகள் வகித்தவர்களுக்கு மட்டுமல்ல சாதாரண மக்களின் எதிர்பார்ப்புகளும் பின்னடைவுகள் ஏற்படவே செய்கிறது. புதியவர்களின் வரவு, புதிய திட்டங்களாக மாற்றமடையும் போது ஏற்படும் விளைவுகள் தாக்கத்தையே தரும்.

பிரதமர், மந்திரிமார், துணைமந்திரிமார், எதிர்க்கட்சித் தலைமைகளுடன் தொடர் திட்டங்கள் தொடர மறுக்கும் நிலைகளால் தீர்மானிக்கப்பட்ட தொழில்வாய்புக்கள், சிறைப்பட்டோருக்கான விடுதலைக்கான முயற்சிகள், மீள்குடியேற்றங்கள், வீட்டுத்ட திட்டங்கள், மலையக மக்களின் சம்பள முரண்பாட்டுப் போராட்டங்கள்,காலதாமதம், பின்னடைவுகள் மக்களையே பெரிதும் பாதிக்கும் நிலை அரச மாற்றத்தால் நேற்றைய நிலைகள் இன்று வேறுபடும்போது நாளை எப்படித் தொடரப்படும் என்பது மக்கள் ஏக்கமாக உள்ளது.

( தொடர்ச்சி பக்கம் 08)



# சமூக அக்கறை மிக்க சமூகத்தை மீளுருவாக்க வேண்டும்

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

**இன்று சமூக நல்லிணக்கத்தினைப் பாதிக்கும் மிக முக்கியமான விடயம் போதைப்பொருட்களின் பாவனை ஆகும். சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மதத் தலைவர்களின் பங்களிப்பு சிறப்பிடம் பெறுகின்றது. மதத் தலைவர்கள் தான் இவற்றை வருங்கால சந்ததியினருக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள், அதிபர்கள் நல்லொழுக்கத்தைப் போதிப்பதில் அக்கறை காட்ட வேண்டும். இவை பிரதேசமெங்கும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். அறநெறிப் பாடசாலைகள் இவ்விடயத்தில் விழிப்புடன் செயற்பட வேண்டும். மேலும் அரசாங்க வேலை வாய்ப்பு கள் வழங்கப்பட வேண்டும். கூட்டுக்குழுமமாக வாழ்ந்த எமது சமூகம் இன்று தனிநபர் சமுதாயமாக மாறி விட்டது. இதனால் எமது சமூகம் பாதுகாப்பு அற்ற சமூகமாக உள்ளது. சமூக அக்கறை மிக்க ஒரு சமூகத்தை நாம் மீள் உருவாக்க வேண்டுமெனப் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.**

பிரதேசமட்டத்தில் நல்லிணக்கக்குழு அமைத்தல் தொடர்பான கூட்டம் யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திரு.பொ.தயானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமிய மதத் தலைவர்கள், பேரா.பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், ஒவ்வொரு கிராமஅலுவலர் பிரிவுகளிலுருந்து வருகை தந்த பிரதிநிதிகள், எமது பிரதேச செயலக கள உத்தியோகத்தர்கள் வருகை தந்திருந்தனர்.

பிரதேச செயலர் அவர்கள் அங்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்றுக் கொண்டு பிரதேச மட்ட நல்லிணக்கக்குழு அமைத்தலின் நோக்கத்தினைத் தெளிவு படுத்தினார்.அவர் தொடர்ந்து உரையாற்றும் போது நாட்டில் இன மதங்களுக்கிடையே இன்று பல்வேறு முறுகல் நிலை காணப்படுகின்றது. இவற்றைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பிரச்சனைகள் வரும் முன் காப்பதே சிறந்தது. சில தீய சக்திகளின் செயற்பாடுகளால் அர்த்தமற்ற ரீதியில் பதட்டங்கள் நாட்டில் ஏற்படுகின்றன.

( தொடர்ச்சி பக்கம் 07)

# சமூகத்திற்காக உழைப்போரைப் பாராட்டுவது சமூகத்தின் பொறுப்பாகும்



பிரதம விருந்தினராக உலகத்தமிழ் பேரவைத் தலைவர் அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரும் சிறப்புவிருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திரு.பொ.தயானந்தன், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், மௌலவி யாபீர், பேராலய உதவிப் பங்குத் தந்தை அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ஜே/68 முதியோர் சங்க 41வது ஆண்டுவிழாவும், சான்றோர் கௌரவிப்பு விழாவும் சென் றோ.க ஆலய முன்றலில் முதியோர் சங்கத் தலைவர் திரு.க.திருவெம்பலம் தலைமையில் நடைபெற்றது.


( தொடர்ச்சி பக்கம் 04)

# மலையக மக்களின் போராட்டம்

மலையக மக்களின் உரிமைப் போராட்டம் “உழைப்பிற்கேற்ற ஊதியம் கொடு” என வெளிநாட்டு செலாவணியை இலங்கைக்க அள்ளித்தரும் உழைப்பாளிகளின் உரிமைக்குரலாக ஒற்றுமையின் அடையாளமாக மலையகத்தின் குரலலொலி தென்னிலங்கையில் ஓங்கி ஒலித்து அதிர வைத்தது.

உழைப்பிற்கேற் உதியமாக ஆயிரம் ரூபாய் கொடு என மனிதாபிமானப் போராட்டம் வெற்றி பெற ஏனைய மாவட்டங்களிலும் உணர்வாளர்கள் ஒன்று கூடிக் குரல் கொடுத்தமை உழைப்பாளிகளின் ஒற்றுமைக்கு ஒத்து நின்ற வரலாற்றுப் பதிவாகியது. சுரண்டும் வர்க்கத்திற்குச் சவாலாக அமைந்தது. இதில் ஊடுருவிகள் வற்து திசை திருப்பாதிருக்க விழிப்புடன் தொடர்ந்து உரிமையை வென்றெடுக்க எல்லோர் கரங்களும் ஒன்றிணைத்து ஓரணியாய் இணைவோம்.

## கார்த்திகைப் பூக்கள்




சாவுக்கு சவாலாகி
சரித்திரம் எழுதி
சந்ததியின் விடுதலைக்காய்
தன்னுயிர் ஈர்ந்து
மண்ணில் புதைந்து
கார்த்திகைப் பூக்களாய் மலர்ந்து
மண்ணில் புதைந்து
துயில் கொள்ளும்
எம்முறவுகளே! நட்புக்களே!
நினைவகலா நினைவுடன்
எழுவீர் எம் விடியலுக்காய் ............

- தனுசன் -

# சமூகத்தின் அத்திபாரம் வகுப்பறைச்சூழல்

திரு.கந்தசாமி மணிவண்ணன்
ஆசிரியர், யா/மானி. இந்து.



பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலிருந்து பல பிரச்சனைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து பல இலட்சியங்களோடு வருகின்ற மாணவர்களையும் பாடப்பரப்பையும் இணைக்கும் உன்னதமான இடம் வகுப்பறையாகும். இங்கே காணப்படுகின்ற மாணவர்களை நற் பிரஜையாக்கி சமூகத்தின் நல்ல உறுப்பினர்களாக மிளிர வைக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடம் காணப்படுகின்றது. பிள்ளைகளின் உள்ளங்களை மகிழ்விக்கின்ற சூழலாக வகுப்பறைச் சூழல் காணப்பட வேண்டும்.

( தொடர்ச்சி பக்கம் 11)

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச திரைப்படவிழா 2018

தெ.சந்துரு




இம் மாதம் 3–8 வரை அயன்டா 14 நிறுவனத்தின் பிரதான பங்களிப்புடன் 4வது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா நடைபெற்று முடிந்திருக்கிறது. வழமைபோல பல்வேறு பட்ட புதிய சிந்தனைகளையும் திரைப்படரசிகர்கள் மத்தியில் 5வது திரைப்படவிழாவுக்கானஆர்வத்தினையும் ஏற்படுத்திச் சென்றிருக்கிறது4வது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா.

கார்கில் சதுக்கம், கைலாசபதி கலையரங்கு, பொதுநூலகம், பிரிட்டிகவுன்சில்,அமெரிக்கன் கோர்னர் ஆகிய இடங்களில் திரைப்படமற்றும் குறும்படக் காட்சிகள் இடம்பெற்றன.

திரைப்படவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் கார்கில் சதுக்கத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் பிரதமஅதிதியாக இந்தியாவைச் சேர்ந்த பலதிரைப்படவிருதுகளுக்குச் சொந்தக்காரரான திரைப்படத் தயாரிப்பாளர் திரு.சாயிஎன் கருன் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். இந்தியத் திரைப்பட உலகின் சிறந்த நடிகை அர்ச்சனா ஊர்வசி,எயிப் நாட்டைச் சேர்ந்த சாபாஎலாசிகாகக்,அவுரேலியாவைச் சேர்ந்த கார்லா மரியாலோச் மற்றும் இலங்கை நாட்டவரான முரளிதரன் மயுரன் ஆகியோர் உட்பட ஏனைய நடுவர்களும் நிகழ்வை அலங்கரித்திருந்தனர். இந் நிகழ்வில் திரைப்பட மற்றும் குறும் படப் போட்டியாளர் களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வுமற்றும் வாழ் நாள் சாதனையாளர் விருது என்பன வழங்கப்பட்டது.

சிறந்த திரைப்படமாகபங்களாதேசினைச் சேர்ந்த இளம் திரைப்பட இயக்குனர் நுர் இம்ரன் மிது அவர்களின் இயக்கத் தில் வெளிவந்த"கோமளரொக்கட்" திரைப்படம் பெற்றது. சிறந்தசர்வதேசகுறும்படமாக"டாத்யா" த வூட் பக்கேர்ச் ஒவ் ரோதாபெற்றுக்கொண்டது. சிலோன் தியேட்டர் சிறப்பு விருதினை துலங்கஎன் டிவேந்திரவின் "சில்ரன் ஒவ் வைற" குறும்படம் பெற்றதுடன் பர்வையாளர் விருதினை மதிசுதாவின். "வெடிமணியமும் இடியன் துவக்கும்" பெற்றது. வாழ்நாள் சாதனையாளர் விருதினை திரைப்பட ஒளிப்பதிவாளர் வைரமுத்து வாமதேவன் அவர்களுக்காக அவரது பேரன் பெற்றுக்கொண்டார்.

பிரதமஅதிதியானதிரைப்படத் தயாரிப்பாளர் திரு.சாயிஎன் கருன் அவர்கள்தனதுஉரையில் 4வது தடவையாக இடம் பெறும் யாழ்ப்பாணதிரைப்படவிழா யாழ்பாணத்தின் திரைப் பட வரலாற்றில் மிகவும் முக்கிய ஒருவிடயம் என்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இலங்கையில் பல புகழ் கொண்ட திரைப்படத் தயாரிப் பாளர்கள் இருக்கிறார்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மனித மனங்களையும் மண்வாசனையும் பிரதிபலிக்கும் பல திரைப்படங்கள் உருவாக்கம்பெற்றுள்ளன. உணர்வு களை விளங்கிக்கொள்ளுதல் என்பது திரைப் படத்தின் வாயிலாக எய்தக் கூடிய முக்கிய விடயமாகிறது. ஒன்றாய் உணர்ந்து ஒன்றாய் அழுது ஒன்றாகவே வாழுதல் என்பது சிறந்த ஒருதிரைப்படம் கூறும் கலைத் தத்துவம். சிறந்த மனிதன் சமுகஉணர்வுள்ளவனாக இருத்தல் வேண்டும் இதற்கு திரைப்படம் பெரிதும் பங்களிப்புச் செய்கிறது என்றார்.இறுதியாக நிறைவு திரைப்படம் அவுத்திரேலியா வைச் சேர்ந்த வாவிக் தோன்டனின் இயக்கத்தில் உருவான"சுவீற் கன்ரி" என்ற திரையிடல் இடம்பெற்றது. மற்றுமொரு யாழ்பாண திரைப்பட விழாவை மனங்களில் இருத்தி திரைப்பட



ரசிகர்களிடமிருந்து விடைபெற்றது4வது யாழ்ப்பாண சர்வதேச திரைப்படவிழா,2018.

**"யாழ்ப்பாணத்தில் மனித மனங்களையும், மண்வாசனையையும் பிரதிபலிக்கும் பல திரைப்படங்கள் உருவாக்கம் பெற்றுள்ளன. உணர்வுகளை விளங்கிக் கொள்ளுதல் என்பது திரைப்படத்தின் முக்கிய விடயமாகிறது "**



( 03ஆம் பக்கத் தொடர்ச்சி)

# சமூகத்திற்காக ........

சான்றோர் கௌரவிப்பினை பிரதம விருந்தினர் அருட்பணி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளாரும், பேராசிரியர்சண்முகலிங்கன் அவர்களும் இணைந்து "சமூகசெம்மல்" எனும் கௌரவ-பட்டத்தினை அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளாரும், திரு.செ.ஜோசப்பாலா அவர்களும், திரு.க.யோகரெட்ணம் அவர்களும், திரு.தஸ்லீம் அப்துல்கபூர் அவர்களும், திரு.ஏணஸ்ற் அவர்களும், திரு.ராஜா மாஸ்ரர் அவர்களும், திரு.அ.ஜோச் அவர்களும் பெற்று கலைநிகழ்வுகள், வாழ்த்துரைகளும் நடைபெற்றது.

சமூக முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்போரை கௌரவித்து வாழ்த்துக் கூறும் நற்பண்பை மூத்தோர் முன்னெடுத்த சான்றோர் கௌரவிப்பு மிகவும் பாராட்டத்தக்கது. நன்றிப் பண்பைமறந்து செல்லும் நமது சமூகத்தில் நல்ல பண்பைத் தூண்டும் இவ் ஒன்று கூடல் மன மகிழ்வைத் தருகிறது எனப் பிரதம விருந்தினர் அருட்பணி எஸ்.ஜே. அம்மானுவேல் அடிகள் தெரிவித்தார். சிறப்பு விருந்தினர் பேராசிரியர் ஏ.சண்முகலிங்கன் வாழ்த்துரை வழங்குகையில் மூத்தோர் வாழ்வின் அனுபவங்கள் எமது சமூகத்தின் சொத்தாகும். சமூகத்தில் மதிக்கப்படும் சான்றோரை வாழ்த்துவதுடன் சிறந்த சமூக செம்மல்களை ஊக்கப்படுத்தும் இம்முயற்சிகள் ஓர் முன்மாதிரியான செயல்களாகும்.சமூகத்துக்காக உழைப்போர் உருவாக வழிகாட்டும் சிறப்பை வெளிப்படுத்திய மூத்தோரின் முன்மாதிரிகள் நன்றிப்பகிர்வை வெளிப்படுத்தும் ஆண்டு விழா அர்த்தம் நிறைந்தாக அமைந்தமை பாராட்டத்தக்கது என்றார்.

மௌலவி யாபீர் உரையாற்றுகையில்,
எந்த நிலையில் உயர்வடைந்தவர்களையும் உருவாக்க தம் வாழ்வை அர்ப்பணித்த தாய், தந்தையரே இந்த மூத்தவர்கள். குடும்பத்தில் எப்படி வளர்க்கப் படுகிறார்களோ அவர்களால் பெருமைப்படக்கூடியளவு இன்றைய பெற்றோர் தமது பிள்ளைகள் வளர்ப்பிலும் அக்கறையடன் வளர்த்தாலே நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்பலாம். குருவாக, ஆசானாக, வைத்தியராக, சிறந்த கட்டடக் கலைஞர்களாக மட்டுமல்ல நல்ல சமூகத்தை உருவாக்கும் மதிப்பு மிக்க மனிதர்களைப் பெற்றோர் அர்ப்பணத்துடன், கண்காணிப்புடன் வளர்த்ததாலே தான் சிறந்த உருவாக்கத்தில் உருவாக்கப்பட்டார்கள் இதனை இன்றைய குடும்பத்தவர்கள் உணர இப்பாராட்டுக்கள் சமூகத்திற்கு சிறந்த செய்தியை வெளிப்படுத்தும் நல்ல நிகழ்வை வாழ்த்துகிறேன் என்றார்.



யாழ்கியூடெக் கரித்தாஸ் சர்வமத சமாதானக் குழுவினர் கொழும்புக் கரித்தாஸ் நிறுவனத்துடன் சமயத் தலைவர்களை யும். தலங்களையும் சந்திக்கச்சென்ற போது

# யோகாசனப் பயிற்சி வழங்குவதில் நீண்ட காலமாக நிறைவான பணியை ஆற்றிவரும்

✍ நதிபரன்

## – நல்லூர் நாவலர் மணி மண்டபம் –



காலமாற்றத்திற்கேற்பமக்களதுகலை,கலாசாரவிழுமியங்கள்,மரபுசார் கட்டமைப்புகள் வழக்காறுகள் போன்ற பழமைபேணும் பண்பு கள் எல்லாம் அருகியழிந்துவரும் நிலையில் ஒருசிலவிடயங்கள் மாத்திரம் இன்னும்தம் இருப்பை உறுதி செய்கின்றமையை காணலாம். இந்துமதம் சார்ந்த பண்டைக் காலகலைகளுள் முக்கியத்துவம் பெறும் கலையான யோகக்கலைபற்றியபுரிதல்கள் தற்காலத்தில் உணரப்படும் தன்மையாலும் இக்கலை பற்றிய பிரக்ஞைபூர்வமான தேடல்கள் தரணியெங்கும் வியாபித்து வருகின்ற நிலையில் ஐ.நா அவையில் கிடைத்த மகத்தான அங்கீகாரமும் அக்கலையின்பால் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. ஆம், இப்போதுஎங்கும் "யோகா" என்றசொல் பற்றியதான முணுமுணுப்புகள் அதிகரித்துள்ளநிலையில் யோகப் பயிற்சி மீதான ஆர்வங்கள் ஈடுபாடுகள் விருப்பங்கள் என்பவையும் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் இக்கலையை பற்றி அறிய அதாவது எங்குயாரிடம் முறையாககற்கமுடியும்? என்றஆர்வமும் ஆதங்கமும் எழுவது இயல்பானதே. ஏனெனில் எமது பிரதேசத்தை பொறுத்தவரையில் முறையாக பயிற்சி பெற்றவர்களும் சரி, பயிற்சியளிப்பவர்களும் சரி மிகவும் குறைவுஎனலாம். இத்தகைய சந்தேகங்களை நிவர்த்திக்கும் வகையில் சுமார் 12 வருட காலமாகயோகாசனபயிற்சியை இலவசமாக, சேவை நோக்கில் போதிக்கப்பட்டு வரும்நல்லூர் நாவலர் மணிமண்டபத்தின் பெருமைகளை அறியாதவர்கள் குறைவெனலாம். இம் மண்டபமானது நல்லூர் முருகப் பெருமான் அருளாட்சி புரியும் நல்லையம்பதி முன்றலில் மிடுக்குடன் அமைந்திருக்கிறது. அப்போது நாடு காலனித்துவ ஆட்சியால் கட்டுண்டு கிடந்தபோது அன்னிய ஊடுருவல்களினின்று சைவத்தையும் தமிழ் மொழியையும் தன்னிரு கண்களாக கருதி கட்டிக்காத்த பெருமகனாரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது காணியில் அவரது பெயரிலேயே அமைந்திருப்பது சிறப்புக்குரிதாகும். இந்து சமயவிவகாரஅலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப் பட்டு வருகின்ற இந்த மண்டபத்தில் யோகாசன வகுப்புகளுடன் நுண்கலை வகுப்புகளும் இலவசமாக நடைபெற்றுவருகின்றன.

(8ம் பக்கம் பார்க்க)

# நடக்கும் என்பார் நடக்காது நடக்காது என்பார் நடந்து விடும்

என்ன விசு அண்ணே ஊரில ஏதேதோ எல்லாம் நடக்குது நீங்க என்ன ஒண்டும் தெரியாத மாதிரி ஒதுங்கி இருக்கிறியள்? என தில்லையார் வந்து மரத்தடியில குந்தினார்.

என்ன நடந்தால் என்ன இன்னும் என்ன நடக்கப்போகுது எல்லாமே இப்ப அரசியலாப் போச்சு, நடக்கும் என்பார் நடக்காது, நடக்காது என்பார் நடந்து விடும் இன்றும் எங்கட சந்திக் குந்தில குந்தலுக்கு மாகாண சபை கலைய புதியவர்களும் வந்து குந்தி கதையளக்க சபை கலைய பல புதியவர்களும் வந்து குந்தி கதையளக்க வரப்போகினம் நாம கதைச்சு நடக்கிறது என்ன? மழை விட்டாலும் தூவானம் விடாது போ: எண்டார் விசு.

அப்ப மாகாணசபை சந்தை கலைஞ்சுது எண்டு சொல்லுங்கோ எனப் பாக்கியமக்கா வெற்றியிலையில சுண்ணாம்பைத் தடவி வாயுக்க வைச்சாள்.

பாக்கியத்துக்கு என்ன வீடு வருகுதாம் எல்லோஇனி என்ன பிள்ளையும் வேலை எடுத்திடும், இனி சந்தைக்கும் வர மாட்டா தானே

அண்ணே என்ர கோவத்தை கிளறாதையுங்கோ, பின்ன பிள்ளையள படிப்பிச்சு வேலைக்கு அலைஞ்சா போராடினது யாரோ, பின்கதவால பெறுகிறது ஆரோ, இது போல தான் மழையிக்க நனைஞ்சு நாங்க சாகிறம். இப்ப பேப்பரில வாறதப் பாத்தா இந்த ஆண்டிலயும் வீடு வராது போல, இதுக்குள்ள மாகாணசபையில நடக்கிற சண்டையப் பாத்தம் தானே. சந்தையில நடக்கிற சண்டைய மாதிரி கேவலம் கெட்டு குடும்பச் சண்டை, கோஸ்டிச் சண்டை மாதிரி ஒரே குழுவுக்குள்ளேயே எத்தின சிறுகுழுக்கள். தங்கட பெயருக்காக அலைஞ்சு எத்தின விடயங்களை நாட்கள கடத்திப் போட்டினம். சுளையான சம்பளம், சொகுசு வாகனம் நிதியள வைச்சு என்ன உருப்படியா செய்திச்சினம் தெரியும் தானே. இப்ப ஒருத்தர் மற்றவரை குற்றம் சாட்டித் தப்பிக்கப் பாக்கினம்.

ஓமோம் பாக்கியம் சொல்லுறதிலயும் ஞாயமிருக்கு, முதலில சபைக்கு மரியாதை குடுக்கிற பயிற்சி நடாத்தி மக்கள் பார்க்க முன்னுருமை கொடுத்து முன்மாதிரியா இருக்கப் பழக வேணும். 5ம் ஆண்டு கொலசிப்புக்கு கொடுக்கிற முன்னுரிமை பயிற்சிகள் இப்ப அரசியல்வாதிகளுக்கும் கொடுத்தா நல்லது. நாகரிகம், பண்பாடு கற்று கொடுக்க வேணும் பாரு என்றார் தில்லையார்.

எல்லாம் முடிஞ்சு போச்சு இனிச் சுடலைஞானம் பேசுவினம் பேசுவினம் அடுத்த வரவுக்காக எல்லாருக்கும் ஒதுக்கின பணத்தில ஏதும் உருப்படியா செய்திருந்தா, வேலை வாய்ப்புக் குடுத்திருந்தா சனத்தின்ர தேவையளப் பூர்த்தி செய்து நல்ல பாராட்டப் பெற்றிருக்கலாம் தானே எண்டாள் பாக்கியம் அக்கா.

ஏன் பிள்ளை பொருளாதார வலயம் உருவாக்கப் போய் மரக்கறிக்கு ஒரு சந்தை, மாமிசத்துக்கு ஒரு சந்தை, பலசரக்குக்கு ஒரு சந்தை எண்டு இடம் பாத்து திரிஞ்சுகால கோஸ்டி நடாத்திச்சினம்பாரு.

ஒயிலில தண்ணி கலந்ததா? தண்ணியில ஒயில் கலக்குதா? எண்டு விசாரணை விகாரத்தில அலைஞ்சமே, குளத்துத் தண்ணி கொண்டு வரப்போய் கோஸ்டியாப் பிரிஞ்சு மல்லுக்கட்டி மக்களை பகையாளியாக்க முனைஞ்சமே.

பதவி ஆசையில எங்கட வாத்தியாரை மாத்தி உங்கட வாத்திய போட்டா நல்லம் எண்டு குரங்கிட்ட அப்பம் பிரிக்க எங்கட மூக்கு போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாக வேணும் எண்டு இரவோடிரவாக முதல் கதிரைக்கு கயிறிழுத்து கவணரிட்ட போனமேஇதை பின்னிருந்து நடத்தின தலைமைய என்ன சொல்ல? இப்பிடி

## கேட்டியளே சங்கதி



- வானம்பாடி -

எத்தினயை சொல்லலாம் எல்லாம் குடும்பத்திற்குள்ள தீர்கிறத சந்தையில கொண்டை பிடிச்ச மா்திரி ஊர் சிரிக்க வைச்சு யாரிட்ட சொல்லி மாள என மௌனத்தைக் கலைத்தார் விசு.

இதுகளப் பாத்து தானே எங்கிட்ட வந்து போறவையளும் தங்கட வாக்குறுதியள மேடைப் பேச்சாக்கிப் போட்டு அங்காலை போய் தங்கட காரியத்தை நடத்துகினம். எத்தினையே பிரேரணை களை எழுதி வைச்சும் எதை நிறைவேற்ற முயன்றம் எண்டால் தேர்தல் விஞ்ஞாபனங்கள் போலத்தான் எல்லாம் புஸ்வாணமாகிற்றுப் பாரு. முதலில குடும்பத்துக்குள்ள இருக்கு ஒழுங்கான வழிகாட்டல் அது வீட்டிலயும் காணேல்ல, அரசியல்லயும் காணேல்ல, உலக நாட்டு தலைவர் களை சந்திக்க நேரமிருக்கு, உள்ளூரில உள்வீட்டு பிரச்சனையள கவனிக்க நேரமில்லை. இதால தானே தினம் தினம் சாவுக்கு சவால் விட்டு உண்ணா நோன்பிருந்து சிறையில வாடுற உடன்பிறப்புகளின்ரை வலி கூட உணராமல் ஏதேதோ சந்திப்புக்கள் நடாத்தி மக்களை திசை திருப்பினம் என்ற ஆவேசம் தில்லையரின் கருத்தில் தொனித்தது.

அண்ணே இப்பெல்லாம் வீட்டில அடுப்பு மூளுறதில்லை. எல்லாம் சுப்பர்மாக்கற்றும், கொட்டல் சாப்பாடுகளும் தான் எங்க வீட்டில நடக்குது என்றார் சுந்தலிங்கம்.

என்ன சுந்தா இப்பிடி சொல்லுறீர் வெளிநாட்டில இருந்து வந்தா வீட்டு கைச்சுவையை ருசிக்கத்தானே இங்க வாறீர். அதையேன் விட்டிட்டீர்.

நான் செய்யிற பிழையோ நாடு செய்யிற மாற்றமோ தெரியேல்ல விசு அண்ணே எங்கட ஊருக்கு வந்தா நம்ம நாட்டு சுவையள கூடிக்குலாவி சுவைக்கத்தான் வாறனான். இங்க பாத்தா அடுப்பு மூளுதில்லை. முன்னம் எண்டா மண் சட்டி பானையில சமைச்சுத்தாறதும் அம்மியில அரைச்ச குழம்போட உடன் மீன் சாப்பாடும், பனங்காய் பலகாரம், கூழ், கஞ்சி எண்டு வாய் ருசிக்க வீட்டாரோட கை ருசிகளை நினைச்சு வந்தா எல்லாம் ஏமாத்தமா போச்சண்ணே.

நீரே ஏத்துக் கொண்டீர் வீட்டுக்கு எண்டு மின்சார அடுப்புகளும், கிறைன்டர், ரீ.வி எண்டும் கொண்டு வந்து குடுத்துப் போட்டு அடுப்படியில முன்னையதுகள தேடினா எப்பிடி கிடைக்கும் பாரு சுந்தா.

எல்லாம் அந்நிய நாட்டு மோகங்களால எங்க எல்லாமே தொலைஞ்சு போச்சண்ணே வீட்டுக்கோழி முட்டையளும், கோடியில இருந்த முருங்கை, மா,பலா, அகத்தி, பப்பா மரக்கறி, பழங்கள் ஒண்டையும் காணேல்லையே எங்க எண்டு கேட்டா அது குழை கொட்டுது எண்டு வெட்டிப் போட்டினமாம். பத்தை பிடிச்சதைத் துப்பரவாக்கக் கூலி குடுத்துப் போட்டு என்னைக் கூட்டிக் கொண்டே கொட்டலில அல்லோ சாப்பாடு வேண்டித்தருகினம் இப்ப.

பாத்தியே தம்பி எங்கட மக்கள எல்லாரையும் சோம்பேறி ஆக்கினதால நாங்கள் இப்ப எல்லாம் கடையை நம்பியும் கொட்டலை நம்பி கொத்து றொட்டி, பீசா எண்டும், கோழி வறுவல் விட்டால் ஒண்டும் உள்ளூர் மரக்கறி மீன், இறைச்சியள கூட ஐஸ்சாக்கியதை தான் உள்ள வைச்சிட்டியள். இது தான் இப்ப மருந்தும், மாத்திரைகளோட சின்னன், பெருசு எண்ட பேதமின்றி நோய் காவியாக அலையுது.

அண்ணே எத்தின மாசம் வருசம் கடந்த உறவு பண்டங்கள் எமக்கு, பூச்சி எறும்பு எதுக்கும் பிடிக்கலாம் எண்டு தானே ஏத்தின மருந்துகள் பாதுகாக்குது. நாங்க உண்ணுறத இதைப்பிள்ளையளுக்கும் கொடுத்து பல நோயள வர வைக்கிறம், பழசுகள் பலமா இருக்க சிறுசுகளை நோயால ஜெமலோகம் போக நாங்க கவனமா இருக்கிற வரை அங்கை இருக்கிறவையள் இதை உணர்ந்ததால் தானே மாடி மனைகளில் மரக்கறித் தோட்டம் வைச்சு மருந்தில்லாத உணவைப் பிள்ளையளுக்கு குடுக்கிறதோட குடும்ப ஐக்கியம், சுயமுயற்சியளை பிள்ளையளும் பங்கேற்று வளர்க்கினம். இங்க வந்து பார்த்தா லெக்கோன் கோழியள வளக்கிற மாதிரி எல்லோ பக்கற் உணவுகளை பள்ளிக்கு செல்லுகிற குழந்தையளுக்கும் கொடுத்து முழுநாளும் கொத்துக் கடையளும் பிஸ்கட்டுக்களையும் காட்டி எங்கள சந்தோசப்படுத்தப் பாக்கினம் இதை நினைச்சா கை ருசிக்காக வந்த பயணம் காணாமல் வீணானதை உணருறன் என்றார்.

# தேசத்தின் சொத்தான சிறுவர்களைப் பாதுகாப்போம்





இன் றைய சிறு வர் கள் நாளைய நாட் டைவழிநடத் தி ஆட்சிசெய்பவர்கள். அதனால் தான் ஒவ்வொரு குழந்தை யையும் நல்லநிலையில் வளர்த்தெடுத்து இனத்திற்கும் நாட் டிற் கும் உ லகிற் கும் ஒப் படைக் க வேண் டியது ஒவ்வொருவரினதும தவிர்க்க முடியாத பொறுப்பாகின்றது. ஆதிமுதல் இன்று வரை மனித சமுதாயம் சிறுவர் நலனில் அக்கறை செலுத்தி பாதுகாப்பான ஒளிமயமான சிறுவர் உ லகத் தை அமைத் துக் கொடுக் க வேண் டியது சமூகத்திலுள்ள ஒவ்வொரு தனிமனிதரதும் கடமையாகும்.

இலங் கையில் போரால் பாதிக் கப் பட்ட சிறுவர் கள் வன்முறைகளுக்கு ஆளாவது நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள் ளதாக யுனிசெப் அறிவித் துள் ளது. இலங்கையில் ஒவ்வொருநாளும் மூன்று தொடக்கம் ஐந்து சிறுவர்கள் வரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் படுகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய அறிவு ஒவ்வொரு தனி நபருக்கும்அவசியமாகவுள்ளது. சிறுவர்கள் என்றால்யார்? அவர்களின் உரிமைஎன்ன? துஷ்பிரயோகம் என்றால்என்ன? இடம் பெறுவதற்கான காரணங்கள் எவை? எவ்வாறு சிறுவர்களைப் பாதுகாக்க முடியும்? போன்ற அறிவுடன் கூடியதான விழிப்புணர்வு இன்று ஒவ்வொரு தனிநபருக்கும் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது.



நாட்டில்நடைபெற்றுவரும்சமூக,உளவியல்பிரச்சனைகளுக்கும்,பல்வேறுகொடுமைகளுக்கும்,போதைப்பொருள்பாவனைகளுக்கும்,சகலவிததுஷ்பிரயோகங்களிற்கும்காரணம் இளம்சமுதாயத்திற்குஉரியஉரிமைகளைஅனுபவிக்கவழி செய்யாதுஅவர்களதுஉரிமைகளைமதிக்காதுபுறந்தள்ளியமையேஆகும்.மனிதஉரிமைகள்அனைத்தும்சிறுவர்களுக்கும்உரித்தானதாகும். சிறுவர் உரிமைகளிலிருந்தே மனித உரிமைகள் தோற்றம் பெற்றள்ளன. சிறுவர்களுக்கு சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு அவசியமான நிபந்தனைகளே சிறுவர் உரிமைக ளாகும். அதாவது சமூகத்தில் சிறுவர்களுக்கு உரித்தாக வேண்டிய வரப் பிரசாதங் கள் சிறுவர் உரிமைகளாகும். பிரத்தியேகமான முறையில்சிறுவர்களுக்கேயுரியவை என்று சர்வதேச ரீதியாக ஐக்கியநாடுகள் தாபனத்தால் ஏற்று அங்கீகரிக்கப் பட்ட உரிமைகள் சிறுவர்உரிமைகளாகும்.

இலங்கையில் ஒக்டோபர் முதலாம் திகதி குழந்தைகள் தினமாக கொண்டாடப் பட்டுவருகிறது. உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கிடையே புரிந்துணர்வினையும் பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிறுவனங்கள் அரும்பாடு பட்டு வருகின்றன. உதாரணமாக யுனிசெப். யுனெஸ்கோ. சிறுவர்பாதுகாப்புநிதியம் .போன்ற பல அமைப்புக்கள் பல்வேறு செயற்றிட்டங்களை சிறுவர் நலன்க ளினைக் கருத்திற் கொண்டு அவர்களை முன்னேற்றுவதற் காக நடைமுறைப்படுத்தி வருகின்றன.

சிறுவர்கள் என்போர்இலங்கைசாசனப்படி 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவராவர். 1939 இன் சிறுவர் இளைஞர் கட்டளைச் சட்டம் சிறுவர் 14வயதிற்குக் கீழ்ப் பட்டவர் என்றும்இளைஞர் 14-16 என்றும்வரையறுத்துள்ளது. 1989இன் வயது வந்தவர் திருத்த சட்டத்தின் படி சிறுவர் 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட வராவர். பொதுவாக 14 வயதுவரைஎனஏற்றுக்கொள்ளப்படுகிறது

சர்வதேச மட்டத்தில் 1989 நவம்பர் 20 ஆம்திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபை சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது. 1991 யூலை 7 ஆம்திகதி இலங்கை இச்சமவாயத்துக்கு உடன்பாட்டைத் தெரிவித்தது. இன்றுவரை 192 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப் பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, கைச்சாத்திடப்பட்ட இந்த ஆவண மானது. முன்னொருபோதுமில்லாதவாறு சர்வதேசவாரியாகப் பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டஒருஆவணமாகும்.

உரிமைகள் பற்றிய சமவாயம்

**உறுப்புரை 19** - பெற்றோர்களினால் அல்லது ஏனையவர்களினால் உருவாக்கப்படக் கூடிய சகல வடிவங்களிலான துஷ்பிரயோகம். புறக்கணிப்பு மற்றும் சுரண்டிப் பிழைத்தல் போன்றவற்றிலிருந்து சிறுவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரச தரப்பினைச் சார்ந்திருப்பதுடன். இது சம்பந்தமாக தடுப்பு மற்றும் சிகிச்சையளித்தல் திட்டங்களையும் அரசதரப்பினர்மேற்கொள்ளல்வேண்டும்.

**உறுப்புரை 27**- ஒவ்வொரு பிள்ளையும் அதன் உடல். உள. ஆன்மீக. ஒழுக்க. சமூகமேம்பாட்டுக்கு ஏற்றவாறான வாழ்க்கைத் தரத்தினை அனுபவிக்கும் உரிமையுடையதென்பதை அரசதரப்பினர் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்

**உறுப்புரை 34**- விபசாரம். ஆபாசப்படத் தயாரிப்பு என்பன உள்ளடங்கலாக. பாலியல் ரீதியாக சுரண்டப்படல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றிலிருந்து அரசதரப்பினர் பிள்ளையைக் காப்பாற்றுதல் வேண்டும்

**உறுப்புரை 36**- பிள்ளையின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய மற்றெந்த வகையான சுரண்டிப் பிழைக்கும் நடவடிக்கைகளிலிருந்தும் அரசதரப்பினர் பிள்ளையைப் பாதுகாத்தல் வேண்டும்.

**உறுப்புரை 39**- எந்த வகையான புறக்கணிப்பு. சுரண்டல் அல்லது துஷ்பிரயோகம். சித்திரவதை அல்லது குரூரமான. மனிதத் தன்மையற்ற அல்லது அவமதிக்கின்ற கண்டிப்பு அல்லது தண்டனை அல்லது ஆயுதப் பிணக்குகள் எவற்றினாலும் பாதிக்கப்பட்ட பிள்ளை. உடலாலும் உள்ளத்தாலும் குணமடைந்து. சமுதாயத்தில் மீளவும் இணைந்து கொள்ளச் செய்வதற்கு பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் மேற்கொள்ளவேண்டும்.

நிக்சன் பாலா
உளவளத்துணையாளர்
மற்றும் உளசமூகப் பணியாளர்

**வண்ணை நாவலர் வித்தியாலய மாணவர் உளவளபயிற்சியில் கலந்து கொண்ட அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளார் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்ற சிற்சபேசன் பவநந்திகா அவர்களையும் வாழ்த்தினார்.**



# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 6

## உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள்

பரமபுத்திரன்



தமிழ்பேசுவதிலும்ஆங்கிலம் பேசுவது சிறப்பு என்று இன்னும் ஆங்கிலத்தில் பேசுவதை உயர்வாக நினைக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள் நாம் ஆங்கிலத்தை தவறாக பேசினால் எம்முடன் மிகவும் கோபம்கொள்வார்கள். ஆங்கிலத்தில் கொண்ட பற்று காரணமாக ஆங்கிலத்தை தவறாக பேசாதே என்பார்கள். பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிப்போரும் இதற்கு விதிவிலக்கல்ல. இதனாலேயே ஆங்கிலம் படிப்பதை வெறுத்த வெறுக்கும் மாணவர்கள் இன்னும் உண்டு. நான்கூடஆங்கில ஆசிரியர்களின் அடாவடியால் ஆங்கில அறிவை பெற்றுக்கொள்ளமுடியாத ஒருவன்தான். உடைகள் கூட தமிழ் உடைகளிலும் மேலை நாட்டு உடைகள் சிறந்தவை என்று அந்த உடைகளையே விரும்புவர். ஆங்கிலம் படித்தவர்கள்தான் ஆங்கிலேயர் அணியும் "கோர்ட்–சூட்" கைக்கடிகாரம் அணியவேண்டும் என்ற காலமும் எம்மத்தியில் நிலவியது. இதற்கும் மேலாக எங்கள் தமிழர்கள் சொல்லும் செய்திகளிலும் பார்க்க மேலைநாட்டவர்கள் சொல்லும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இன்றும் வழமையில் உண்டு. இப்போது சிந்தியுங்கள் எங்கள் தலைவர்கள் தவறாக சென்றமைக்கு காரணம் அவர்கள் தவறல்ல. அவர்களுக்கு வழிகாட்டிய கல்விமுறையின் தவறு. அது இன்னமும் தொடர்வது எங்கள் சாபக்கேடு.

இதில் அவதானிக்கக்கூடிய இன்னுமொரு செய்தியும் உண்டு. வடக்கில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்க்கைக்கான பொருள்தேடும் வழிமுறைகள் குறைவென்றே சொல்லமுடியும். அதனால் கல்வியை வலுவாக பற்றிக்கொண்டால் தொழில் வாய்ப்பு அதிகரிக்கும் என்ற நோக்கில் கல்விகற்றல் பிரதானமாக மாறியது என்றே சொல்லலாம். எனவே தொழில்வாய்ப்பு கருதி கல்விகற்று உயர்ந்தனர். அதிகமான வெள்ளுடுப்புத் தொழிலாளிகள் உருவாகினர். எனவே இக்கல்வியானது தனது சமூகத்தினை உயர்த்துவதற்கு பயன்பட்டதிலும் தமக்கு பொருள் சேர்க்கவே உதவிற்று என்பது மறுக்கமுடியாத உண்மை. எனவே கல்வி என்பது சகமனிதரின் வாழ்வை உயர்த்துவதற்கு பதில் தனிப்பட்டவர்களின் சொந்த வாழ்வை உயர்த்தவே அதிகம் உதவியது என்பது ஒத்துக்கொள்ளவேண்டிய ஒன்று. ஆனாலும் இக்கூற்றானது கல்விகற்று உயர்ந்த முழுத் தமிழர்க்கு பொருந்தாது. தான் கற்ற கல்வியை தனது தமிழ் சமூகத்துக்கு பயன்படுத்திய பெரியோர்களும் எம்மிடையே வாழ்ந்தனர், வாழ்கின்றனர் என்பதும் ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒன்று.

தமிழர்கள் சிங்கள அரச அடக்குமுறைகளில் இருந்து விடுபட எண்ணிய காலங்களில் அரசியல் தலைவர்களின் வழிகாட்டலில் பின்தொடர ஆரம்பித்தனர். படித்தவர்களாகவும், நல்ல பேச்சாளர்களாகவும் இருந்த அரசியல் தலைவர்கள் மக்களிடம் செல்வாக்குப்பெற்றனர். அத்துடன் தேர்தல்களில் வெற்றியும் பெற்றனர். இந்த தலைவர்கள் முழுப்பேரும் தவறானவர்கள் என்றும் சொல்லிவிட முடியாது. தங்களால் இயன்றவரை அகிம்சை வழியில் போராடினர். தந்தை செல்வா என்று தமிழ் மக்கள் அழைக்கும் செல்வநாயகம்.உட்பட பல தலைவர்கள் உண்ணா விரத போராட்டத்தில் இறங்கி சிங்கள இனத்தின் சாபக்கேடுகளான சிலரால் அடித்து தூக்கி வீசப்பட்டனர்.இதில்அமிர்தலிங்கம் அவர்கள் மண்டை உடைந்துஇரத்தம் சொட்டிய ஒரு தலைவர். இரத்தம் சொட்டியபடி பாராளுமன்றம் சென்ற இவரை ஜெ.ஆர். ஜெயவர்த்தனா கேலிசெய்த வரலாறும் உண்டு. பாராளுமன்றில் தமிழர்கள் எந்த ஒரு காலகட்டத்திலும் சிங்களர்க்கு சமமான ஆசனங்கள் பெறமுடியாது என்று ஐம்பதுக்கு ஐம்பது என்ற ஒரு கோரிக்கையை வைத்த பொன்னம்பலம் அவர்களும் உண்டு.

ஆனாலும்இறுதிவரைகொண்ட கொள்கைகளில் உறுதியாக இல்லாமல் நிலைமாறும் இயல்பும், பதவி ஆசையும் எங்கள் தலைவர்களிடம் இருந்திருக்கிறது.இந்த நிலைப்பாடுகளால் கட்சி மாறி சென்றவர்களும் உண்டு.

இதுவும்தமிழர்களைபின்தள்ள ஓர் காரணம் என்றே சொல்லமுடியும்.

சிலதமிழ்தலைவர்களின் உறுதியான நிலைப்பாடு காரணமாகவே தனிச்சிங்கள சட்டம் தடைப்பட்டது. தனிச் சிங்கள சட்டத்தை சிங்கள தலைவர்களும் எதிர்த்து உள்ளனர். இதனை சிங்கள தலைவர்களின் செய்தியில் பார்ப்போம்.தாய்மொழியில் கல்வி கற்கும் வாய்ப்பும் எமக்கு கிட்டியது. இன்னும் பல சாதனைகளை சிங்களவரின் அடாவடிகளை தாண்டி நிலைநாட்டியுள்ளார்கள். இதன் உச்சக்கட்டமாக வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி தமிழர்களின் உயர் வாக்குகளை பெற்று தமிழர்கள் தனித்து வாழவிரும்புகிறார்கள் என்ற செய்தியை சிங்களத்தலைமைகளுக்கும், உலகுக்கும் அறிவித்தார்கள்.இத்தீர்மானமேஇளைஞர்களின்எழுச்சியையும் தீவிரமாக்கியது. இதிலும் பொத்துவில் தொகுதி பாராளுமன்ற தமிழ் உறுப்பினர் கனகரத்தினம் கட்சி மாறினார். பின்னர் அவர் சுட்டும் கொல்லப்பட்டார். இந்த இடத்தில் கவனிக்கவேண்டிய ஒன்று பிரிவினை கோருவோர் இலங்கை பாராளுமன்றில்அங்கம் வகிக்கமுடியாது என்ற தீர்மானம் இலங்கைப்பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டபோது நாம் பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கத்தயார் ஆனால் மக்கள் ஆணையை மீறமாட்டோம் என்று தமிழரின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறியமை குறிப்பிடவேண்டிய ஒரு முக்கிய அம்சம். இதுவரை எங்கள் தலைவர்களை தொடர்பாக சிந்தித்த நாம் சிங்களமக்களுக்குநன்மை செய்வதாக காட்டிக்கொண்டு தமிழர்களுக்கு எதிராக கொடுமைகள் இழைத்த சிங்களத்தலைவர்களையும், அவர்கள் செய்தவற்றையும் சுருக்கமாக அடுத்த தொடரில் பார்ப்போம்.

இனி விடுதலை அமைப்புகள் தொடர்பாக எண்ணுவோம். விடுதலை அமைப்புகளை பொறுத்தவரை அவை பலமுள்ளவையாக தோன்றினவோ இல்லையோ பல்கிப்பெரிகின. ஏறத்தாழ முப்பத்து மூன்று விடுதலை அமைப்புகளுக்கு மேல் பட்டியலிடப்பட்டன. உண்மையில் இது அன்றே ஆரம்பித்துவிட்ட விடுதலை போராட்ட சிதைப்பு நடவடிக்கை என்றே சொல்லமுடியும். காரணம் ஒரே வலுவான அமைப்பு என்றால் அந்த அமைப்பு தெளிவான சரியான பாதையில் சென்று இலக்கினை அடையும் வாய்ப்பு உண்டு. எனவே இதனை குழப்பும் நடவடிக்கையாக பல்வேறு இயக்கங்கள் தோன்றின என்றே சொல்லமுடியும். இந்தியாதான் ஈழ தமிழ் மக்கள் வாழ, அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க அமைப்புகளுக்கு பயிற்சி கொடுத்து போராட்டத்துக்கு வித்திட்டது என்றால்இ ஏன் ஒரு இயக்கத்தை மட்டும் உருவாக்கி, அவர்களுக்கு மட்டும் பயிற்சி கொடுத்து, உறுதியுள்ளவர்களாக மாற்றி அனுப்பவில்லை. அநேகமாக வலுவான என்று சொல்லப்பட்ட எல்லா இயக்கங்களும் இந்தியாவினை அடித்தளமாக கொண்டுதான் வளர்ந்தது எனின் ஏன் இயக்கங்கள் பல்கிப்பெருகும் நிலை வந்தது. இன்று இயக்கங்கள் தொடர்பாக கதைகதையாக சொல்பவர்கள்இ அன்று நாம் எல்லோரும் ஒரே நோக்கில் செல்பவர்கள் ஏன் வேறுபட்டு நிற்கவேண்டும் என்ற கேள்விகளை எழுப்பவில்லை.

விடுதலை அமைப்பு தொடர்பாக பலருக்கு தெரிந்த உண்மைகள் உண்டு. அதேவேளை தெரியாத உண்மைகளும் உண்டு. பல கட்டுக்கதைகளும் உண்டு.

( தொடரும்)

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

# சமூக அக்கறை ...

இக்கூட்டத்தில் பிரதேச செயலர் அவர்கள், இவ்வருட ஆரம்பத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத் தருடன் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைக்கப் பட்டு கிராமங்களில் சிக்கல்கள் ஏற்படுமிடத்து உடனடியாகத் தீர்வு காணப்பட்டது. ஆயினும் பல்வேறு காரணங்களால் தற் சமயம் இது நடை முறையில் இல்லை. இது மீண்டும் நடை முறைப்படுமிடத்து இந் நல்லிணக்கக் குழுவுடன் இணைந்து சிறப்பாக செயற்பட முடியும் எனக் கூறினார்.வீதிகளில் கூடும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுப்ப தற்குப் பல செயற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இளைஞர்கள் இதில் ஆர்வமாகப் பங்கெடுப்ப தில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளார் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, இன்று நாட்டில் ஏற்படும் பல்வேறு விதமான அசம்பாவிதங்களுக்கு மிக முக்கிய காரணமாக அமைவது போதைப்பொருள் பாவனையாகும். இது நாளுக்கு நாள் பெருகிக் கொண்டி ருக்கின்றது. இதனைத் தடுப்பதற்கு வேகமா கவும், விவேகமாகவும் செயற் பட வேண்டும் என்றும் சென்ற வாரம் பொலிஸ் மா அதிபர் தலைமையில் பொதுமக்களு டனான கூட்டம் ஒன்று குருநகர்ப் பகுதியில் நடை பெற்றது. கலந்துரையாடல்கள் பொலிசாருக்கும், பொது மக்களுக்குமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

இஸ்லாமிய மதத் தலைவர் திரு.அலிஸ் அவர்கள் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் போது பிள்ளைகள் வளர்ந்து வரும் காலத்திலேயே அவர்களுக்கு நற்குணங்க ளை சொல்லிக் வேண்டும். தீயவர்களால் நல்லவர்கள் பாதிக்கப்படாத வகையில் பார்த்துக் கொள்ள சமயதலங்களில் நடைபெறும் அறநெறி, மறைக்கல்வி பாடக் கற்கைநெறியில் கற்பிக்க வேண்டும் என்றார்.

இந்துமதக் குருக்கள் தமது கருத்துக்களைக் கூறும் போது தேவையற்ற இளைஞர் கூட்டம் கூடுவதாலும், சமூகத் தில் அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. இவர்கள் மதுபோதைகளைப் பாவித்து விட்டு மக்களுக்கு இடையூறு களை ஏற்படுத்துகின்றனர் என்றும் இளைஞர் சமூகத்திற்கு விழுமியங்கள் வீட்டிலேயே போதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இப்பிணக்குகளிற்கான அடிப்படைக்காரணிகளைக் கண்டறிந்து செயற்பட வேண்டும் என அண்மையில் நாட்டில் நடைபெற்ற சில அசம்பாவிதங்களை மேற்கோள் காட்டினார். மேலும் எமது பிரதேசங்களில் அசம்பாவிதங் கள் அல்லது முறுகல் நிலைகள் ஏற்படும் போது இக்குழு கலந்துரையாடி அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நல்லிணக்கக் குழுக் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து நல்லிணக்கக் குழு அமைத்தலின் ஒரு அங்கமாக நல்லிணக்கக் குழு உருவாக்கப்பட்டது. போசகர்களாக மூன்று மதத் தலைவர்களும், தலைவராக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களும், செயலாளராக திரு.ஜோசப்பாலா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

( 03 பக்கத் தொடர்ச்சி)

# நேற்று–இன்று–நாளை?



நேற்று முதலமைச்சர், இன்று கட்சித்தலைவர், நாளை என்ன நிலை என்பது பற்றிய ஆரூடங்கள் பலராலும் பலவாறு கருத்துக்கள் கூறிக் கொண்டாலும் எல்லாம் உள்வீட்டுச் சமாச்சாரமாகப் பேசிக் கொண்டவை. உலக நாட்டு பிரச்சனைகள் போல் பேசு பொருளாகி விட்டது. வீட்டுக்குள் பேசித் தீர்க்க வேண்டியவை வீதிக்கு வந்தது யாரால் என்பதனை மீளப் பரிசோதனை செய்து கொள்ளட்டும். அடுத்த தேர்தலுக்கு யாரை வேட்பாளராக அமர்த்துவது என முண்டியடித்துக் கொள்வதில் தம் சுயத்தை வெளிப்படுத்த முடியாது திண்டாடுவதும் தமிழின சாபக்கேடாகி விட்டது.

அரசியலில் புத்திசாலிகள், ஜாம்பவான்கள் என்றெல்லாம் தம்மைத்தாமே கூறி ஒருவரைப் பார்த்து ஒருவர் கூறும் வார்த்தைகள் மூலம் தமது தரங்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள். அரசியல் முதிர்ச்சியில்லையென அ, ஆவன்னா கற்றுக் கொடுக்க முயல்பவர்களும் தோசை போடத் தெரியாது புரட்டிப் போட முந்துவோரும், ஆடத் தெரியாதவருக்கு மேடை சரியில்லை என்போரும், மதுக்கடையில் எல்லோருமே கூடிக் குடிச்சுக் கும்மாளமிட்டு வெளியில் வரும்போது மட்டும் வீணான காசு வீணாகப் போச்சு நான் அளவாத்தான் இருக்கிறன் மற்றவர் ஆடிப்பாடி வெளியில க்காட்டுபவர்கள் எல்லாம் இவரால தான் வந்தது என்பது பழி போட்டுத் தப்பிக்க விழையும் நீதிமான்கள் போல ஆடாமல் அசையாமல் முழுதாய் முழுகி மூழ்கடித்த பின் நான் அவனில்லை அடுத்த முறை பார்க்கலாம் என எதிர்பார்த்து வெளியேற்றியவர்கள் சொல்வது உங்களை நான் காப்பாற்றுவேன் முதலில் என்னை இப்ப காப்பாற்றுங்கள் என வடிவேல் வசனம் பேசுவோருக்கும் மக்கள் தீர்ப்புக் காத்திருக்கிறது.

எல்லோரும் ஏறி விழுந்து பல்லக்கில சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுவதற்குத் தயாராகிவிட்டனர். அடுத்த மாகாணசபை கூத்து அமர்க்களமாக இருக்கும் புதுப்புதுக் கட்சிகள் புதிசா முளைக்க ஆரம்பிச்சதில பெண் ஒருவர் தலைமையேற்று கட்சி தொடங்கியதில் அனந்தி அவர்கள் முதலிடம் பெற்றுள்ளார். அடுத்து வளர்த்த கடா மார்பில் பாயும் என யார் நினைத்தார்கள்? வரும் வரும் எனஎதிர்பார்த்து வந்தே விட்டது. இனிப் பல பெயர் வைக்காத கட்சிகளும் மாங்கி சரியும் கட்சிகளும், மாற்றிடம் தேடி அலைகிற நிலையில் காக்காக் கூட்டுக்குள் குயில் முட்டை இடக் காத்திருக்கிறது. தேசியப்பறவைகள் மட்டில் மனதில் மகிழ்ச்சி பொங்க புதுப்புது முகங்களோடு பலரும் கால் பதிக்க வருகிறார்கள்.

தேசிய கட்சியில் கேட்க இருப்பவர்களுக்கு ஒரு தொகை பணங்கள் கைமாறும். இதை விட தோற்றாலும் வெற்றி தான். வென்றாலும் வெற்றி தான். இது ஒரு வித அரசியல் லஞ்சம் கொடுக்கும் புது வடிவங்கள் தான். தோற்றாலும் உட் செல்ல தேசியபட்டியலில் உள் நுழைந்தால் ே பாதும் மந்திரிப் பதவி வரை உச்சிக்குக் கொண்டு முன்னேறலாம். வழிதெருவில் லஞ்சம் கொடுப்பவர்களை மிஞ்சிய அரசியல் லஞ்சங்களில் உள் நுழைவது தேசியப் பதவிகள் பின் கதவால் உள்நுழைந்த மந்திரிமார்கள் பலர் உள்ளார். எங்கள் நாட்டில் லங்சம் இருக்கும் வரை கலங்கத் தேவையில்லை. இவை நேற்றும், இன்றும், நாளையும் தொடர்கதையாகப் போகிறது. இதனால் ஊர் இரண்டுபட்டது வடக்கில், இப்போது நாடும் இரண்டுபட்டது தெற்கில், இனி உலகும் இரண்டுபடும் இவை தான் சுயநலம் பொருந்திய ராஜதந்திரமா?

(5ம் பக்கத் தொடர்ச்சி)

# யோகாசனப் பயிற்சி வழங்குவதில் ....

குறிப்பாக பண்ணிசை,மிருதங்கம்,வயலின் போன்ற வகுப்புகளிலும் பெருமளவு மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

யோகாசனபயிற்சிவழங்குவதில் தனித்துவம் கொண்டு விளங்கி வரும் இம் மண்டபத்தில் 2003 ஆம் ஆண்டில் அப்போதைய இந்து கலாசார அமைச்சராக இருந்த தி. மகேஸ்வரன் அவர்க ளால் ஆரம்பிக்கப்பட்ட இவ் வகுப்புகள் தற்போதும் தடையின்றி தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 'குறிப்பாக யோகாசன–தியான வகுப்புக்கள் பெருவரவேற்பை பெற்றிருக்கின்றன என்றால் மிகை யாகாது. அன்றிலிருந்து இற்றை வரையான காலப்பகுதியில் சுமார் 5000 பேர்வரை யிலானோர் பயிற்சிபெற்றுள்ளனர். அக்காலத்தில் இந்தியாவில் பயிற்சிபெற்றவி.என் சிவனேஸ்வர ராஜா வினால் பயிற்சிவழங்கப்பட்டது. சுமார் ஐந்துவருடங்கள் வரையான இவரது சேவைக்காலத்தில் ஏராளமானோருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இவரிடம் பயிற்சி பெற்ற சிலர் தற்போது யோகா பயிற்சியளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது இவரால் உருவாக்கப் பட்ட மாணவனே இங்கு பயிற்சி வழங்கி வருகிறார் என்பது அவருக்குள்ள பெருமையை எடுத்துக் காட்டுகிறது. இங்கு யோக பயிற்சி பெற்றவர்கள், பெறுபவர்க ளில் பெரும்பாலானவர்கள் இளையவர்களாகவே இருக்கின்றமையால் இக்கலைமீதான இளையோரின் ஈர்ப்பானது அதிகரித்து வருவதனையே காட்டுகின்றது. முன்பெல்லாம் இக் கலையை பயில்பவர்கள் வயது வந்தோராகவே இருப்பர். ஆனால் தற்போது இக் கலை பற்றிய தப்பபிப்பிராயங்கள், மூட நம்பிக்கைகள், தவறான எண்ணங்கள் எல்லாம் சூரியனைக் கண்டபனிபோல் விலக ஆரம்பித்திருக்கும் நிலையில் இளையதலைமுறையினர் அதிகளவானோர் பயிற்சி பெறுகின்றமை குறிப்பிடத் தக்கது.

அத்துடன் இங்கு நோயாளர்களுக்கும் விசேட கவனமெடுத்து பயிற்றுவிக்கப் படுகிறமையால் தமதுநோய் குணமாக வேண்டும் எனும் பெரு விருப்புடன் வரும் பெரும்பாலான நோயாளர்கள் பயிற்சி முடிந்துசெல்கையில் நோயினின்று குணமாகி பூரணதிருப்தியுடன் செல்லும் நிலைமையை அவதானிக்க முடிகிறது. எனவே நித்தியசிரஞ்சீவியாகிய யோகப் பயிற்சியை தகுதியான குரு மூலம் முறையாக பயின்று பயிற்சி செய்யும் போது எல்லையற்ற நன்மைகளை பெற முடியும். இந்நிலையில் உடல், உளரீதியில் நன்மைகளை தரும் இப்பயிற்சியை பயில விரும்புபவர்கள் நல்லூர் நாவலர் மணிமண்டபதில் பதிவுகளை மேற்கொண்டு இணைந்து கொள்ளமுடியும். மூன்று மாதகாலங்களை கொண்ட இப் பயிற்சி நெறியா னது ஆண்கள், பெண்கள் என இருபாலாருக்கும் தனித் தனி பிரிவுகளாக நடத்தப் படுவதுடன் பயிற்சி நிறைவில் இந்துகலாசாரஅலுவல்கள் திணைக்களத்தால் சான்றிதழ் களும் வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும். அத்துடன் இக்கலைபற்றிய மேலதிக விழிப்புணர்வையும் அறிவை யும் ஏற்படுத்துவதற்காக துறைசார் வளவாளர்களைக் கொண்டு பயிற்சிகருத்தமர்வுகளும் நடத்தப்படுகின்றன. இத்தகைய நற்பணிக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் மற்றும் ஏனைய (மணி மண்டப) உத்தியோ கத்தர்கள் நன்றிக்குரியவர்களாவர். இவர்கள் இவ் வகுப்புக்கள் தொடர்ந்தும் சிறப்பாக நடை பெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கவேண்டும் என நல்லூர் கந்தபெருமானின் அருளாசியை வேண்டுகி றோம்.

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்கள்: வே.சஞ்சீவதனுசன் | செ.யோசப்பாலா
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# செயற்படும் தலைவர்களை உருவாக்க வேண்டும்

சமூகப்பணி என்பது சம்பளத்திற்காகச் செய்யப்படுகின்ற வேலை என்ற சிந்தனை மாற வேண்டும். எவ்வித எதிர்பார்ப்பு மின்றி பணிபுரியக் கூடியோர் ஒவ்வொரு கிராமங்களிலும் இருக்கின்றார்கள். இவர்களில் சிலர் கடிதத் தலைப்புக்களை அடித்து கூட்டங்களை நடாத்தி நிதியைத் திரட்டுவதற்கு முயற்சிப்பதோடு மட்டும் நின்று விடுகின்றார்கள்.

பதவி, பணம், புகழ், அரசியல் லாபம் போன்ற வற்றிற்காக செயற்பட விரும்புகிறார்கள். அந்தளவுக்கும் தானும் செயற்படுத்தாமல் மற்றவருக்கும் முட்டுக்கட்டை போடுபவர்களாக இருப்பதாலும் தூர நோக்கமில்லாதவர்க ளாகவும் காணப் படுகின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம் தலைவர்களை உருவாக்கும் தலைமைத்துவம் இல்லாமை யால் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார்கள். இதற்குக் காரணம் பல நிறுவனங்கள், அமைப்புக்கள், சங்கங்கள், மன்றங்கள், நிலையங்கள் போன்றவற்றின் தலைவர்கள் தாம் சார்ந்த அமைப்புக்களை எவ்வாறு நடாத்து வது என்ற அறிவைப் பெறாது நோக்கமில்லாது இருப்பதன் காரணமாக தொடர்ச்சியாக செயற்பட முடியாதிருக்கின்றார்கள். இந்த நிறுவனங்களை நம்பியிருக்கின்ற மக்கள் மற்றும் ஆதரவாளர்கள், அனுசரணையாளர்கள் சலிப்படைந்து நல்ல பல நிறுவனங்கள் வருகின்ற பொழுதும் அதே சலிப்பைம், வெறுப்பையும் காட்டுகின்றார்கள். செயலில் ஈடுபடும் தலைவர் களை உருவாக்க வேண்டுமெனின் தனி மனிதர்களிலிருந்து தான் புதிதாக உருவாக வேண்டும்.

யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் எமது சமூகம் தனது கட்டுமானங்களை, வேர்களை இழந்து சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். நமக்கிருக்கும் தலைவர்களும், நாட்டின் தலைவர்களும் என்ன செய்கிறார்கள் வறுமையைப் போக்க வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாதவர்களாகவே கதிரையை நிரப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

மக்களின் இடர்களை விளங்கிக் கொண்டு அவர்களுக்கேற்றவாறு சமூகப்பணியை ஆற்றக்கூடிய தலைமைத்துவத்தைத் தான் இன்று சமூகம் எதிர் நோக்குகின்றது. எனவே இத்தகைய தலைமைகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் உருவானால் அக்கிராம மக்களுக்கு சுபீட்சமாக இருக்கும். எனவே,

பெயரளவில் தலைவர்களாக இருக்கும் சமூக வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவர்களை சமூகம் நிராகரித்து விட்டு புதிய செயற்படும் தலைவர்களை உருவாக்க வேண்டும். அர்ப்பணிப்புள்ள ஒவ்வொரு தனி மனிதனும் உறங்கிக் கொண்டிருக்கும் தலைமைத்துவங்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு உயிர்ப்புடன் பணியாற்ற தயாராக வேண்டும். இந்த தயார்ப்படுத்தல் கிராமங்களிலிருந்து ஆரம்பித்து நகரம், மாவட்டம், மாகாணம், நாடு என்று விரிவடைய வேண்டும்.

இதற்கு இன்றைய இளையோர்கள் நல்ல தலைமைத்துவத்தை ஏற்க தயாராக வேண்டும். நல்ல தலைவர்களாக செயற்பட துணிய வேண்டும். மூத்தோர்களைப் புறந் தள்ளாது அவர்களின் அனுபவங்களினூடாக கடந்த காலத்தைக் கற்றுக் கொண்டு எதிர்கால நன்மை கருதி செயற்படும் தலைவர்களாக உருவாக வேண்டும். அப்போது தான் சமூகசேவையுள்ள தலைவர்களால் நமது நாடு வளம் பெறும். வறுமை போக்கப்படும்.வாழ்வாதாரம் மேம்படுத்தப் படும்.

# சமய நல்லுறவை வளர்க்கும் இலங்கை கரித்தாஸ் பொன்விழா ஆண்டு - 2018





கொழும்பில் யாழ்இந்துக்கல்லூரி முதல பரிசைப் பெறும்போது




யாழ்கியூடெக் கரித்தாஸ் முற்றத்தில்

உலகஅரங்கில் சமூகப் பணிகரைங்கில் சமூகப் பணிகளை முன்னெடுத்துசெயற்படும் சமய நிறுவனமானகரித்தாஸ் அமைப்பு ஓர் கத்தோலிக்க சமூக,நீதி,சமாதானசர்வமதசமூகப்பணிகளில் முன்நின்று உழைக்கும் அமைப்பாகும். கரித்தாஸ் பணித்தளம் முதலில் ஜேர்மன் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு 157 நாடுகளில் பாப்பரசர் தலைமையில் ஆயர்கள் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப் பட்டுவரும் சமயசமூகப் பணிதொண்டு அமைப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும். கரித்தாஸ் என்றால் அன்பு என்னும் பொருள். இதன் பணியில் இன,மொழி,நாடு,மதம் கடந்து வலுவற்ற மக்களை வலுவாக்கி,குரலற்ற மக்களின் குரலாக,மக்கள் மயப்பட்ட,நிறுவனம் என்ற வகையில் மக்களின் பங்களிப்பு உதவிகளைசேகரித்து துன்புறும் மக்களின் துயர்தீர்க்கும் பணிகளால் "உன்னைப்




போல் உன் அயலானையும் நேசி"என்னும் நோக்குடன் உலக அரங்கில் காலத்திற்கு ஏற்றபணிக்ள்,உதவிகள் மேற்கொண்டு விஸ்தரிக்கப்பட்டு வளர்ந்துவரும் சமூகநேயப் பணியகமாகும்.

இலங்கைதிருநாட்டில் சமூக தேவைகளை முன்னுரிமைப்படுத்திமேதகுஆயர் அவர்களின் வழிகாட்டலுடன் அருட்தந்தை யோ பெனான்டோ அவர்களின் தலைமையில் 1968ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2018ம் ஆண்டில் 50வது பொன்விழாவை இலங்கைதேசியகரித்தாஸ் கொண்டாடி மகிழ்கின்றது. கரித்தாஸ் நிறுவனம் 13 கிளைகளாக் இலங்கைமறைமாவட்டஆயர்கள் தலைமையில் இயக்குனர்கள் வழிகாட்டலுடன் சமய,சமூகபணிகளைமுன்னெடுத்துவருகின்றதுஇதன் வெளிப்பாடுகளை மீளாய்வுசெய்வதுடன்



திருமலைகரித்தாஸ் எகெட்,அனுராதபுரம் கரித்தாஸ் செத்சவிய,குருநாகல் கரித்தாஸ் ஜனசத்தா, இரத்தினபுரிகரித்தாஸ் செத்மினி, சிலாபம் கரித்தாஸ்ஜனசவிய,கண்டிகரித்தாஸ் செற்றிக், காலிகரித்தாஸ் செற்கோல், பதுளை கரித்தாஸ் உஸ்கொட்,கொழும்புகரித்தாஸ் செத் சரண என்னும் 13 கிளைகரித்தாஸ் நிறுவனங்களாக இயங்கி வருவதுடன் கரித்தாஸ் பொன்விழா பொலிவுற தமது மறைமாவட்டங்களில் மக்களின் எழுச்சி விழாவாக சர்வ மத சமாதான பேரணிகளுடன் கொண்டாடி மகிழ்கின்றது


இலங்கை கரித்தாஸ் தேசியநிறுவனம் பொன்விழா பொதுவிழாவாக 29 நவம்பர் 2018 அன்று பண்டாரநாயக்க சர்வதேச அரங்கில் அரசசார்பற்றவெளிநாட்டு தூதுவர்கள், உள்நாட்டு



அனுசரணையாளர்கள், மறை மாவட்ட ஆயர்கள், இயக்குனர்கள்,பணியாளர்கள் ஒன்றிணைந்து தேசியநிலைய இயக்குனர் அருட்பணி மகேந்திரகுணதிலக்கதலைமையில் கொழும்பில் நடாத்தவுள்ளனர். இந்த 50வது ஆண்டு பொன்விழா தமது பணிகளை மீள் பார்வைக்கு உட்படுத்துவதுடன் வரலாற்றுப் பதிவினை நூலாக ஆவணப்படுத்தும் செயல்களுடன் முன்னாள் பணியாளர்களையும் கௌரவித்து எதிர்காலத்துக்கு ஏற்றதூரநோக்கை மையப் படுத்தி முன்நகரவும் இப் பொன்விழா தேசிய நிலைய திட்டமிடலுடன் கோலாகல விழாவாக நடைபெறவுள்ளது.

கரித்தாஸ் நிறுவனம் காலத்துக்குகாலம் ஏற்படும் அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள், போரின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டமக்களின் தேவைகள், கடற்றொழில், இயற்கைவிவசாயம், கூட்டுப் பசளை உற்பத்தி, தோட்டத் தொழில் முன்னேற்றம், வியாபாரம் சமாதானமும் நல்லிணக்கமும்,சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டம்,வாழ்வாதாரம்,மீள் குடியேற்றகட்டுமானம் எனப் பல்வேறுபணிகளில் இலங்கையில் சகலபாகங்களிலும் நடைமுறைப் படுத்தி வருகின்றது. மதம்,மொழி,பிரதேசம்,கலாச்சாரம் கடந்து பாகுபாடற்றநற் சமூகத்தை கட்டியெழுப்புவதில் கரித்தாஸ் தேசியநிலையதிட்டமிடல் ஊடாகதேசியகரித்தாஸ் நிறுவனமானது காத்திரமான பங்களிப்பை வழங்கிவருகின்றது.

சமூகப்பணிகளில் இணைந்து பெற்றோர் வாழ்வாதாரத்திலும்,அடிப்டைத் தேவைகளான உணவு,உடை, இல்லிடம், மாணவர் கல்வி, முதியோர் மகிழ்வூட்டல் மூலம் மக்கள் ஒன்றிணைந்து கிராமியகட்டமைப்புக்கள் வலுவடையவும், சமூகத் தேவைகளை மக்களேஉணர்ந்து அரசசார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டு கிராமியவளர்ச்சியால் புதியதலைமைகள் உருவாக்கப்பட்டதும் இப் பொன்விழாவிற்கான சிறப்பு அறுவடையின் சாட்சியமாக வெளிப்படுகின்றது.



குருநகரில் போதைதவிர்ப்பு விழிப்புணர்வில்

இப்பணிகளில் இணைந்துபயணிக்கும் முயற்சியாளர்களானமகளிர், இளையோர், சிறுவர், முதியோரின் முன்னேற்றத்திற்கு பக்கதுணையாக இருப்போர், நல்மனம் கொ்ண்ட உபகாரிகளின் பங்களிப்பும், கூட்டுமுயற்சியில் பங்கேற்கும் பணியாளர்களின் அர்ப்பணிப்புமே இலங்கை கரித்தாஸ் நிறுவன 50வது பொன்விழாஆண்டின் முக்கிய கருப்பொருளாக மிளிர்கின்றது.




# படித்ததில் பிடித்தது

"அன்பு உன்மை" தொடக்கப்பள்ளி பாடநூல் வரிசை எனும் நூலை வாசித்த அனுபவம். இந்தக் கதையை வாசிக்கும் போது மிகவும் சுவாரசியமாகவும் வாசிக்க இலகுவாகவுமிருந்தது. இந்தக் கதையிலிருந்து அப்பா அம்மாவிற்கு உதவ வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. ஆகவே இந்தப் புத்தகத்தை வாசித்து நீங்களும் பயன்பெறலாம்.

**S.இதுர்சன்**

---

சிவம் நீதிக்கதைகள் பாகம் 04
"ஒட்டகமும் குள்ளநரியும்" எனும்நூலை படித்தேன் ஒரு ஒட்டகமும் குள்ளநரியும் உணவு தேடி அலைந்தன இரண்டும் சேர்ந்து கரும்பை விரும்பி ஒற்றுமையாக உண்டது சிறிது நேரத்தில் நரி ஊளையிட்டது. பின்பு ஒட்டகம் நரியைப்பார்த்து தினமும் சாப்பிட்டபின் குளிப்பது வழக்கம் என்றது. நரி தண்ணீரில் மூழ்கியது இருவருக்கும் ஒற்றுமைத் தன்மை இந்தக் கதையில் உள்ளது.

**அ.வக்சவன்**

---

லேணா தமிழ் வாணணின் 1000 ஒருபக்கக் கட்டுரைகள்
நாடகத்தில் ஒரு மன்னனைப்போல வேஷம்
போட்டவன் உண்மையில் ஒரு மன்னனாகி விட முடியுமா?
ஊருக்கெல்லாம் நல்லவனாக இருந்து
மனச்சாட்சிக்கு கெட்டவனாய் ஒருவன்
இருப்பானேயானால் அவனை உலகம் மதித்தாலும்
உள்ளுணர்வு அவனை மதிக்காது.
பிறர் மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ளும் மனப்பான்மை இருக்கும் வரை நம்முடைய குற்றங்கள் பெருகிக் கொண்டே போகின்றது.
வாழ்க்கையில் மேலும் மேலும் வெற்றிகளை அடைந்து வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பவரை சந்தித்து உங்கள் முன்னேற்றத்திற்கு காரணம் அதிஸ்டம் தானே என்று கேளுங்கள் அவர் உங்களை சும்மா விடமாட்டார். ஆர்வமும் முயற்சியும் என்றே சொல்லித்தருவார். ஆக்கபூர்வமான ஆயிரம் தலைப்புக்களில் ஆறாம் கட்டுரைகள் தான் பயனுள்ள விடயமாக உணர்கின்றேன்.
தோல்விகளைத் தாங்குவது எப்படி?
முடிவுக்கு வருவது எப்படி?
போன்ற நூற்றுக்கணக்கான வினாக்களுக்கு விடை தருவதாய் அமைந்துள்ளது. அத்துடன் பொறாமை எண்ணம் ஒருவரில் வந்தால் அவரை பாராட்டிப் பழகவேண்டும்.போட்டி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும். வாழ்க்கையில் முன்னுக்கு வந்துவிட்டவர்களின் திறமையைக் கண்டு வியந்து பாராட்டி அங்கீகரிப்பவர்கள்தான் முன்னுக்கு வருகின்றார்கள். போன்ற கருத்துக்கள் என்னைக் கவர்ந்தது.

**ந.தர்மிகா**

---

மெல்வின் மற்றும் கில்டா பெக்கர் ஆகியோரால் எழுதப்பட்ட "சிலந்திகள்" எனும் சிறுவர் கதைப்புத்தம் நன்றாக இருக்கின்றது. சிலந்தியின் இளை இரும்பை விட உறுதியானது என்று அறிந்தேன். நான் சிலந்தி ஒரு பூச்சி இனம் என நினைத்தேன் ஆனால் இது அரக்னிட் என்னும் விலங்கினத்தைச் சேர்ந்தது என்று அறிந்தேன். பூச்சிக்கு 6கோல்கள் தான் உண்டு ஆனால் சிலந்திக்கு 8கால்கள் உண்டு.

**சி.சஞ்சீவன்**

---

## 44வது பளுதூக்கல் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்று யாழ் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தவர்



**பாசையூரைச் சேர்ந்த சாதனைப் பெண் செல்வி யூ.மேரிலக்சியா கருத்துத் தெறிவிக்கையில்**
**தற்துணிவும், முயற்சியுமே என்னை உருவாக்கியது, இதற்குத் துணை நின்ற ஆசிரியர்களின் ஊக்கப்படுத்தலும் மேலும் உயர்வுக்கு உந்து சக்தியாக அமைந்தது என்கிறார் இவர்**
16 வயதில்

- வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் 70கிலோகிராம் எடையினைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் வென்றேன்.
- வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் நடாத்திய போட்டியில் 80கிலோகிராம் எடையினைத் தூக்கி வெள்ளிப்பதக்கம் வென்றேன்.
- அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய பளுதூக்கல் போட்டியில் 90கிலோகிராம் எடையினைத் தூக்கி வெள்ளிப்பதக்கம் வென்றேன்.

( தொடர்ச்சி பக்கம் 11)

**தேசிய வாசிப்பு மாதத்தில் வேலனை மத்திய கல்லூரியில் (தரம்8) மாணவர்களை 18.10.2018 அன்றுஅவர்களது பாடசாலையில் சந்தித்து வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்த பயிற்சிப் பட்டறை ஒன்றை நடாத்தினோம்.அதில் மாணவர்கள் பெற்ற அனுபவங்கள் சில சிறுவர் களரியை அலங்கரிக்கிறது (ஆசிரியர்)**

ஆசிரியர் ரா.வேங்கடராஜ் இன் மகாத்மா காந்தியின் சுயசரிதை எனும் புத்தகத்தில் மகாத்மா காந்தியின் பிறப்பு அவரது பெற்றோர் பற்றிய சில தகவல்கள், அவரது குழந்தைப் பருவம் பற்றி, காந்தியின் மரணமும் இருவகை அவமானமும் தெளிவாக விளக்கப் பட்டுள்ளது, மற்றும் அவர் சமயத்திற்கு செய்த உதவிகள், அவரின் துன்பங்கள் பற்றியும் படைக்கு ஆள்திரட்டுதல், தாய் நாடு பற்றி எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இவர் தனக்கு ஏற்பட்ட சோதனையை மனதில் வைத்து சத்திய சோதனை எனும் நூலை எழுதியுள்ளார்.

**ச.குயின்தினி**

---

சீதாமணி எழுதிய பாப்பா பாப்பா கதை கேளு என்னும் புத்தகம் வாசித்தேன். எழுத்தாளர் எழுதிக் கொண்டிருந் தார். நரி வந்து ஆலேசனைசொன்னது. சற்று நேரம் எழுதுவதை விட்டு என்னுடன் உரையாடுங்கள் என்றது ஆகவே நாமும் கலந்துரையாடி எழுதுவது சிறந்தது எனக் கற்றுக்கொண்டேன்.

**இ.வேணுஜா**

---

மழலையர் பாட்டு என்ற புத்தகத்தை வாசித்தேன். ஜெயந்தி நாகராஜன் என்பவர் இந்த புத்தகத்தை எழுதி யிருந்தார். அதில் கண்ணன் பற்றி எழுதிய பாடல்கள் இனிமையாக இருந்தது. அவர் செய்யும் சேட்டைகள் தெரிந்தது. ஆசிரியர்கள் எங்களை அடித்தாலும் எங்கள் மீது அன்பாக இருப்பார்கள் என்று தெரிய வந்தது. எங்கள் அம்மா என்றும் பிரியமாட்டார் என்று உணர்த்தியது. எண்ணும் எழுத்தும் கண் என்றே எங்கள் ஆசிரியர் சொன்னாரே நல்ல வழிதனில் நலமாய் அறிவுரை தந்தாரே.

**வ.விந்துஷன்**

---

சிவம் நீதிக் கதைகள் புத்தகத்தை வாசித்தால் பல சம்பவங்களில் நீதி பெறுவோம். இது ஒரு மனிதனை நல்வழிப்படுத்தும் சாதனம் இந்தப் புத்தகம் வாசித்தால் மனிதன் பூரணமடைகிறான். இந்த புத்தகம் வாசித்தால் நேர்மையான வழியில் செல்லலாம்.

**வி.தர்சாயினி**

---

ச.அருளானந்தம் எழுதிய சின்ன தேவதைகள் என்னும் புத்தகத்தை வாசித்தேன். சிறுவர்களிற்கு துணிச்சல் தேவை என்பதை அறிந்து கொண்டேன். பெற்றோர்களின் உறுதி மனநிலையும் கற்றுக்கொண்டேன்.

**ச.ஜெடல்சன்**

---

கவிஞர் துரைசிங்கம் எழுதிய கட்டுரை மலரை வாசித்தேன் கட்டுரை எழுதும் முறை இதில் விளக்கப்பட்டுள்ளது. வீட்டுத்தோட்டம் பற்றியும் திருக்குறள் பற்றியும் சிந்திக்க வைக்கும் விதமாக இருந்தது. செய்தித்தாள் பற்றிய கவிதை சிறப்பாக இருந்தது. யாழ்களரி பத்திரிகையும் – கட்டுரைமலரையும் எமக்கு பரிசாகத் தந்தமைக்கு நன்றிகள்

**ச.மேரி சௌமிகா**

---

விறகு வெட்டியும் கோடரியும் இந்தப் புத்தகமானது ஒருமனிதனை நல்வழிப்படுத்தும் நீதிக் கதைகளை தாங்கி வெளிவந்திருக்கின்றது. "நேர்மை எங்கோ தெய்வம் அங்கே"

**ம.தேனுஜா**

---

இன்னா நாற்பது மூலமும் உரையும் எனும் சிவபாரதி அவர்களின் நூலின்முலம் கதை எழுதும் முறை விளங்கியது. இந்நூலில் வாழ்வில் எவையெவை துன்பம் தருவன எவற்றை செய்யாதிருத்தல் எமக்கு நன்மை தரும் என்பவற்றை விளக்கமாக கதைவடிவில் அறிவுறுத்தப் பட்டுள்ளது. உலகிலுள்ள வைத்தியர்கள் , நீதிபதி,போன்ற உயர்பதவிகளை வகிப்போர்களை உருவாக்குவது ஒரு ஆசிரியராகும். அவரை நாம் மதிக்க வேண்டும் என்பதை இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

**ப.லக்சிகா**

---

சுகிசிவம் எழுதிய அர்த்தமுள்ள வாழ்வு எனும் புத்தகத்தை வசிக்கத் தந்த யாழ்களரிக்கு நன்றிகள் இதில் நான் கற்றுக் கொண்டவை

★ அன்பு கருணை எல்லாம் திட்டம் இடப்படாத தெய்வீக உணர்வுகள்
★ நீ பிறரிடம் எப்படி நடந்துகொள்கிறாயோ அப்படித் தான் உன்னிடம் கடவுள் நடந்து கொள்வார்.
★ கடவுள் என்பது அவரவர் அனுபவம்.
★ ஓர் கடல் அலை எவ்வளவு உயர்ந்து எழுந்து வேகமாய் விழுந்தாலும் அலை ஒரு தனி இயக்கமே இல்லை.எழுந்து ,விழுந்து மோதியது அதனால் மோதப் பட்டது எல்லாமே கடலே
★ என்னால் இதைச் செய்ய முடியாது என்பது கோழைத்தனம். முடியும் என்பது தன்னம்பிக்கை, என்னால் மட்டுமே முடியும் வேறு எவனாலும் முடியாது என்பது ஆணவம்.
★ மாதங்களில் நான் மார்கழி என்கின்றான் கண்ணன்.


**ற.றஜிதா**



யோ.லெனிற்றா தரம் - 08. யா/வேம்படி உ.த.பா

(3ம் பக்கத் தொடர்ச்சி)

# சமூகத்தின் அத்திபாரம் ...........



மாணவர்களை இனங்கண்டு அணுகும் முறை தொடர்பான நிபுணத்துவம் கற்றல், கற்பித்தலில் நவீன நுட்ப முறைகளைக் கையாளும் நுட்பமுறை போன்றவற்றிலே ஆசிரியரின் வெற்றி தங்கியுள்ளது.

வகுப்பறையிலே மெல்லக் கற்கும் மாணவர்கள், சாதாரண மாணவர்கள், மீள்திறன் உடைய மாணவர்கள் காணப்படுவார்கள். அவர்களுக்கேற்ற வகையில் பாடத்தைத் திட்டமிட்டுக் கற்பிக்க வேண்டும். மாணவர்களிடையேயான தனியாள் வேறுபாட்டையும், அவர்களின் விருப்பு, வெறுப்புக்களையும் இனங்கண்டு அவற்றிற்கேற்ப கற்றல், கற்பித்தல் செயற்பட்டை முன்னெடுப்பதே நிபுணத்துவம் மிக்க ஆசிரியரின் சிறப்பம்சமாகும். நாம் ஒவ்வொருவரும் ஆசிரியரால் கவனிக்கப்படுகின்றோம் என்ற மனநிலை மாணவர் மத்தியல் ஏற்பட வேண்டும். இவ்வாறு இருந்தால் தம்மை முன்னிலைப்படுத்த மாணவர்கள் முயற்சி செய்வார். இது மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைகின்றது.

பயன்மிக்க கூட்டாக இயங்கும் ஒத்துழைப்பு மிக்க ஒரு சூழலை ஏற்படுத்தல் வகுப்பறைக் கல்வியின் முக்கிய அம்சமாகும். கூட்டுச் செயற்பாடுகள் மாணவர்களின் அடைவினை அதிகரிக்கும் என ஆராய்சிகள் கூறுகின்றன. குழுக்களாக இயங்குவதற்கு வளங்களைப் பகிர்ந்து வேலைகளில் ஈடுபடவும், அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கும், வாதவிவாதங்களை மதிப்பீடு செய்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

மாணவர்களின் ஆர்வங்கள் அவர்களுடைய அபிலாசைகள், என்பவற்றிற்குப் பொருந்தும் விதத்தில் கற்றல் இலக்குகளை உருவாக்குவதற்கு உதவ வேண்டும். கற்றலை வலிந்து திணிக்காது மாணவனிடம் மறைந்திருக்கும் திறனை இனங் கண்டு அதனை வளர்த்துக் கொள்வதற்கு உதவ வேண்டும். வகுப்பறைச் சூழலானது மாணவர்களை சுதந்திரமாக சிற[illegible] வைக்கின்ற மகிழ் களமாகக் காணப்பட வேண்டும்.

மாணவர்களின் செயலாக்கம் மிக்க ஈடுபாட்டை ஊக்குவிக்கக் கூடிய கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். மாணவர்கள் வெறுமனே செவிமடுத்துக் கொண்டிருக்கும் சூழலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். இயக்கச் செயற்பாடுகளான பரிசோதனைகள், அவதானிப்பு, செயற்திட்டம், களப்பயணம் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது கற்றல் இலகுவாக நடைபெறுகின்றது. வகுப்பறைச் சூழலில் நடைமுறைத்தப்படுகின்ற செயற்பாடுகள் ஒவ்வொரு மாணவனையும் ஆளுமை மிக்கவனாக மாற்றியமைக்க வேண்டும். தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளும் இடமாகக் காணப்பட வேண்டும்.

வகுப்பறைச் சூழலானது நல்லதொரு குடும்பமாக மிளிர வேண்டும். கற்கும் சூழலாக மட்டும் அமையாது எதிர்காலத்தின் நல்ல மனிதனாக மிளிர்வதற்கு வித்திடும் களமாக அமைய வேண்டும். நல்ல பெற்றோராக ஆசிரியர்களும், நல்ல சகோதரர்களாக சகபாடிகளும் அமைய வேண்டும். பிள்ளையின் நம்பிக்கைக்குரிய தலைவராக ஆசிரியர் விளங்க வேண்டும். வறுமை, ஓய்வற்ற வேலை, பிளவு பட்ட குடும்பங்கள் போன்ற பல காரணங்களில் அன்பு, பாசம், கணிப்பு, தேவைகள் பூர்த்தியாக்கப்படாமல் பல ஏக்கங்களுடன் வரும் பிள்ளையை அன்போடு அரவணைக்க வேண்டும்.எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள் நிறைந்த பிள்ளையின் உள்ளங்களை ஆசிரியரும் உணராது விட்[illegible] பிள்ளை விரக்தி நிலையை அடைந்து ந[illegible]ல் முரண்பாடுகளைக் காண்பித்து நெறி பி[illegible]ன வாழ்க்கைக்குத் தள்ளப்படுகின்றது.

[illegible]து தேவைகள் நிறைவேறாத மாணவர்கள் கடைசி ஆசனங்களில் அமர்வதோடு தனிமையை நாடுகின்றனர். தமது மனமுறிவுகளை ஏற்க முடியாது பின்வாங்குகின்றனர். நம்மால் முடியாது, நடக்குத் தெரியாது போன்ற எண்ணங்களுடன் ஒதுங்கி விட முயல்கின்றனர்.சில மாணவர்களிடம் பகல் கனவு காணும் பழக்கம் காணப்படுகின்றது. இதன் மூலம் நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முயல்கின்றனர். வகுப்பறையில் மாணவர்கள் பகற்கனவு காண இடமளிக்காத வகையில் ஆசிரியர் பணிகளை அளிக்க வேண்டும்.

வகுப்பறையில் உள்ள எல்லா மாணவர்களுக்கும் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். பொறுப்புக்களை ஏற்க விரும்பும் மாணவர்களுக்கு போதியளவு பொறுப்புக்கள் அளிக்கப் படாவிட்டால் தாழ்வுணர்ச்சி, தாழ்வுச்சிக்கல் போன்றவற்றிற்கு அவர்கள் உள்ளாவதுடன் வகுப்பறையில் பிரச்சனைக்குரிய மாணவர்களாகவும் மாறி விடுவர். இவர்களே வகுப்பறையின் ஒழுங்கு, கட்டுப்பாடு குறைவதற்குக் காரணமாகவும் அமையலாம். எல்லோரும் தம்மைப் பிறர் புகழ வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். கணிப்புக்களை பெற மாணவர்கள் முயல்வது இயற்கையானது. எனவே மாணவர்களுக்குத் தகுந்த நேரத்தில் புகழுரைகள், பரிசுகள் போன்றவற்றை அளிப்பதன் மூலம் குறித்த மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய மாணவர்களும் தம்மிடையே மறைந்து கிடக்கும் கணிப்புத் தேவைகளால் உந்தப்பட்டு கல்வியில் முன்னேற்றமடைய முயற்சிப்பர். கணிப்பைப் பெற்றுக் கொள்ளத் தவறும் மாணவர்கள் வேறு முறைகள் மூலம் ஆசிரியரினதும், சக மாணவர்களினதும் கணிப்பைப் பெற முயல்வர். கணிப்புக் கிடைக்காவிட்டால் மன முறிவுக்குட்பட்டு விரும்பத் தகாத துலங்கல்கள் ஏற்படலாம். மாணவர்களிடையே காணப்படும் பிரச்சனைகள் துளிர் விடும்போதே அதனைத் தீர்த்து வைக்க வேண்டும். கவனிக்காமல் விடும்போது அதுவே எதிர்காலத்தில் சமூகத்தைச் சீரழிக்கும் பாரிய பிரச்சனையாக மாறுகின்றது. ஆசிரியர் அன்பாக அப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டும்.


மாணவர்களிடையே சுய நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தாம் பெறும் தைரியத்தினூடாகத் தான் மாணவர்கள் தமது ஆளுமைக்கான அத்திவாரத்தைப் போடுகின்றார்கள். தாவரம் ஒன்றிற்கு நீர் எவ்வாறு அவசியமோ மாணவன் ஒருவனுக்கு ஊக்கப்படுத்தலும் அவசியமாகும். மாணவர்களின் ஊக்கம் கொடுத்தலுக்குக் காரணமான மூலங்களை ஆசிரியர் இனங்கண்டு நீக்குதல் மூலம் மாணவர்களைக் கூடிய வினைதிறனுள்ள ஆளுமை விருத்திக்கு இட்டுச் செல்லலாம்.

மாணவர்கள் தவறான நடத்தைகளுடன் பிறப்பதில்லை. அவர்கள் உள, சமூக விருத்தியுடன் நடத்தைப் பிரச்சனைகளையும் காலக்கிரமத்தில் பெற்றுக் கொள்கின்றனர். வகுப்பறைச் சூழலானது மாணவர்களின் நடத்தைகளைத் தூண்டிவிடும் களமாக அமையாது நன்னடத்தைகளைக் கட்டியெழுப்பும் இடமாக அமைதல் வேண்டும். பிள்ளைகளின் ஆளுமையை ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற நோயாகக் காணப்படும் பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து ஆரோக்கிய சமூகத்தை உருவாக்கும் வைத்தியர் ஆசிரியரே. இளம் உயிர்களை ஆளுகின்ற எதிர்காலத்தில் பிரகாசமாக மிளிர வைக்கின்ற ஒரு அற்புதமான பாத்திரம் ஆசிரியத்துவமாகும்.

ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தையுணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாணவர்களின் உள்ளங்களை வென்று பல நற்பிரஜைகளை உருவாக்கிய மனநிறைவு என்றும் கிடைக்கும். சமூகம் எனும் பெரும் கட்டடத்தை தாங்குகின்ற அத்திவாரமான வகுப்பறைச் சூழலை பலமாக அமைத்தால் எதிர்கால சமூகம் என்றும் மிடுக்குடன் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

(10ம் பக்கத்தொடர்ச்சி)

# 44வது பளுதூக்கலில் .........



17 வயதில்

- யாழ்.மாவட்ட பளுதூக்கும் போட்டியில் 95கிலோகிராம் எடையினைத் தூக்கி வெள்ளிப்பதக்கம் வென்றேன்.
- யாழ்மாவட்ட சம்மட்டி வீசுதல் போட்டியில் 22.58மீற்றர் தூரம் வீசித் தங்கப்பதக்கம் வென்றேன்.
- வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் 100கிலோகிராம் எடையினைத் தூக்கி தங்கப்பதக்கம் வென்றேன்.
- அகிலஇலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய பளுதூக்கல் போட்டியில் 108கிலோகிராம் எடையினைத் தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றேன்.
- இளையோர்களுக்கான சம்மட்டி வீசுதல் போட்டியில் 25.85 மீற்றர் தூரம் வீசி வெண்கலப் பதக்கம் வென்றேன்.

18 வயதில்

- யாழ்.மாவட்ட பளுதூக்கும் போட்டியில் 113 கிலோகிராம் எடையினைத் தூக்கித் தங்கப்பதக்கம் வென்றேன்.
- இளையோர்களுக்கான தேசிய மட்ட சம்மட்டி வீசுதல் போட்டியில் 26.58மீற்றர் தூரம் வீசி வெண்கலப்பதக்கம் வென்றேன்.



- 44வது தேசிய திறந்த பளுதூக்கல் போட்டியில் 115கிராம் எடையினைத் தூக்கி வெண்கலப்பதக்கம் வென்றேன் எனக்கூறும் சாதனைப் பெண்ணிவள்


## நீங்களும் யாழ் களரி சந்தாதாரர் ஆகுங்கள்

தொடர்புகளுக்கு
கஜா-முகாமையாளர்
(யாழ்களரி)
076-2963944

அ.இ:114 தீபா ஶ்ரீதரன்
79, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை வடக்கு.

அ.இ:116 தெய்வேந்திரன் துஸ்யந்தன்
23, குகன் வீதி,
அரியாலை.

அ.இ:118 தசாகினி தவேந்திரன்
862, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டிக்குளி.

அ.இ: 115 அன்ரனி பினாட்சா சுபாஜினி
41/57, செட்டியார் தோட்டம்,
செம்மணி வீதி, நல்லூர்.

அ.இ: 117 பரமநாதன் கிருஷ்ணகுமாரி
95, பொன்னம்பலம் வீதி,
அரியாலை.

அ.இ: 119 ஆறுமுகம் தெய்வேந்திரம்
காளிகோவிலடி,
தாவடி தெற்கு.

யாழ்களரி,
புதிய சந்தாதாரர்
28/1,ஏ.வி வீதி,
கொழும்புத்துறை.

பண்பாட்டுத்திணைக்களத்தால் பாரம்பரிய கலைகளான நாட்டுக்கூத்து பாசையூர் கலைஞர்களால் வழங்கப்பட்ட யாழ்பாடி குருநகர் கலைஞர்களால் வழங்கப்பட்ட குருசபதம், வட்டுக்கோட்டை கலைஞர்களால் வழங்கப்பட்ட பப்பரவாதன்" நாட்டுக் கூத்துகள் பாசையூர் சென்அன்ரனீஸ் அரங்கில் மேடையேற்றப்பட்டன.





## J/86 முதியோர் சங்க14வது ஆண்டு விழாவில்...







## யாழ்மாவட்ட சிறுவர், முதியோர் தின விழாவில்





## 2018 வடமாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவில் கௌரவிக்கப்பட்டோர்





இப்பத்திரிகை ஜோ.ஜெஸ்ரின் என்பவரால் கரந்தன் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.10.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது